833 3

OFFICE OF THE ... 15 JUL 1935 MADRAS

# "சித்தன்"

ஓர் மாதாந்தப் பத்திரிகை.


| மாலை 1. | ஜூலை 35. | மணி 7. |
|---|---|---|
| Vol. 1. | July. 35. | No. 7. |



| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வழிபாடு ... .. | 205 |
| 2. | தமிழ் வைத்தியம் ... | 206 |
| 3. | மாற்றுப் பத்திரிகைகள் | 209 |
| 4. | செய்யுள் பகுதி ... | 210 |
| 5. | மாம்பழக்கவிச்சிங்க நாவலர் | 213 |
| 6. | குடிகெடுத்த கள் ... | 219 |
| 7. | நவீன அகராதி ... | 222 |
| 8. | நூதன அனுபவ அலங்கார ரத்னம் | 224 |
| 9. | விவாக ரத்து ... ... | 226 |
| 10 | விதவைகள் விடுதலை ... ... | 230 |
| 11. | சித்த வைத்தியம் ... ... | 231 |
| 12. | ஓர் சம்பாஷணை ... ... | 234 |
| 13. | குணவாகடம் ... ... | 235 |
| 14 | ... செய்பகுதி ... ... | 238 |
| | ...குதி ... ... | 239 |
| | ... ... | 240 |
| | ... ... | 241 |
| | ... ... | 245 |
| | ... ... | 246 |


JL
[illegible], M135CN
M135·1·7
189920.

ஆசிரியர் C.P. சாமி.

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளிவருகிறது.

---

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ. 0—8—0. |
| ,, வெளி நாடு | ... | ரூ. 1—0—0. |
| தனிப்பிரதி | ... | ரூ. 0—1—0. |

சந்தாத் தொகையை முன்னுடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

---

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு | முழுப்பக்கம் | ரூ. 5—0—0. |
| ,, | அரைப்பக்கம் | ரூ. 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ரூ. 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கேழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி. S. I.

# "சித்தன்"

## பழனி.

---

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

## மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

| | | |
|---|---|---|
| மாலை 1. | ஜூலை. 1935 | மணி 7. |

"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை." (குறள்

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா முனிவர்சித்த
ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணக்கற் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ யுடலுயிர்போற்
கலந்தெங் காளுந்
துரியமதி லூடிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம்.

(தாயுமானவர்.)

---

89920

# தமிழ் வைத்தியம்.

இதுவே மற்றெல்லா வைத்திய முறைகளுக்கும் மூலமாயிருந்ததென்றும், இது தொன்றுதொட்டு நமது பரதநாட்டிலிருந்து வருவதென்றும் நம்புவதற்குப் போதிய ஆதாரங்களிருக்கின்றன. உலகில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடைவதற்கேதுவான உடல் நலம், திடகாத்திரம், தீர்க்காயுள் முதலியவைகளை அடையவும் மக்கள் உணவின் ஏற்றத்தாழ்வாலும், சுகாதாரக்குறைவாலும், மிதமிஞ்சிய குடும்ப வாழ்க்கையாலும், அறியாமற் செய்யும் துர்க்கிருத்தியங்களாலும் உண்டாகும் பலவித நோய்களை விலக்கவும், சித்த புருஷர்களான நந்தி, திருமூலர், அகத்தியர், போகர், தேரையர், சட்டைமுனி முதலாயினோர் பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

மக்கள் உடற்கூறு, மருந்து செய்முறை, நோயின் தன்மை முதலியவைகளைப்பற்றி விரிவாகக்கூறும் நூலுக்கு வைத்திய நூலெனவும், அந்நூலைக்கற்று தேர்ச்சி பெற்றவனுக்கு வைத்தியனெனவும், அத்தொழிலுக்கு வைத்தியம் எனவும் பெயர் வழங்கலாயிற்று.

நம் நாடானது முற்காலத்தில் அறிவொழுக்கங்களில் தலைசிறந்து விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய பொருளாதாரத் துறைகளில் மேன்மையுற்று இருந்தது போலவே சோதிடம், வைத்தியம் முதலான சாஸ்திர ஆராய்ச்சியிலும் பயிற்சிபெற்றிருந்ததென அறிகிறோம். சித்தர் பரம்பரையில் முக்கியமாய்ப் பதினெண்மர் வைத்தியம், மந்திரம், வாதம், கற்பம், யோகம், ஞானம் என்ற பொருள்களைப்பற்றி தமிழ் பாஷையில் கூறியிருக்கின்றனர். அவர்களால் வெளியிடப்பட்ட வைத்திய நூல்கள் அநேகமாய்



பரிபாஷையாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளைக்குரு முகமாயறிந்தாலொழிய அதன் ரகசியத்தை எவரும் தெரிந்துகொள்ள மார்க்கமில்லை. அந்நூலின் உட்கருத்தறியாதவர்கள்தான் தமிழ் வைத்தியம் பயனற்றதெனக் கூறிவிடுகின்றனர். அவ்வாறு கூறுபவர் அறிவிலிகள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

வைத்திய நூல்களின் ரகசியத்தை அறிந்துகொள்ள இயலாத பலர், பணம் சம்பாதிக்கும் நோக்கங்கொண்டு தங்களது மனபோனவாறு பொருள்கூறி வைத்தியம் செய்வதால் நமது தாய்நாட்டின் பெயரும் தமிழ்வைத்தியமும் பாழ்படுத்தப்படுகிறது என்பதை நினைப்பூட்டுகிறேன்.

வைத்தியன், வைத்திய நூலாராய்ச்சி உள்ளவனும், வியாதியை நேரிற் பரீக்ஷித்தறியும் ஆற்றல் வாய்ந்தவனும், அநுபவம் பெற்றவனும், வியாதியால் வருந்துபவர்களுக்கு எல்லாவிதத்திலும் உதவிசெய்பவனும், அவனது உயிரில் அபிமானம்வைத்து காக்கும் தன்மையுள்ளவனுமிருத்தல் வேண்டும். மேலும்

தாதுப் பரீக்ஷைவரு காலதேசத்தோடு
சரீரலட்சண மறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தம்து வாகடமறிந்து
பேதப் பெருங்குளிகை சுந்திவகை யாத்திரைப்
பிரயோக மோடு பஸ்பம்
பிழையாத மண்டூர செந்தூர லட்சணம்
பேர் பெருங் குணவர்கடம்
சோதித்து மூலிகா விதங்கண் டுங்கண்டு
தூயதைலம் லேகியம்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயம்
தோற்றியே அமிர்த காமாய்

ஆதிப் பெருங் கேள்வியுடையன் ஆயுர்வேதன்
ஆரும்எம தருமை மதவேள்

என்பதிலிருந்தும் அறியலாம்.

தமிழ் வைத்திய மருந்துகள் நம் நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்கும் நம்மவர் ஆகாராதிகட்கும் உடல் நிலைக்கும் ஏற்றவாறு கூறப்பட்டிருத்தலாலும் இலகுவில் தயாரிப்பதும், குறைந்தநாளில் குணம் தருவதும், விலை மலிவானதும் தமிழ் மருந்துகளாதலாலும் அதுவே நம்மவர்க்கேற்றது என்பதை எவரும் மறுக்கார்.

நமது தேசத்தை நவாப்புகள் ஆண்டகாலங்களில் ஏற்பட்ட கலகங்களாலும், பல படையெடுப்பாலும் நம் நாட்டிலுள்ள அரிய பெரிய சாஸ்திரங்களும் வைத்திய நூல்களும் அநேகமாய் கண்டவாறு சிதறப்பட்டும் சில அந்நியநாட்டினரால் கொண்டுபோகப்பட்டும் சேதப்பட்டுவிட்டமையால் அதிக செல்வாக்குடனிருந்த தமிழ் வைத்தியமானது சீர்குலைந்ததல்லாமல் நூல்களின் தொடர்ச்சிகளும் தவறிப்போய்விட்டனவென சரித்திரவாலாறுகளிலிருந்தறிகிறோம். இதனால் பரம்பரை வைத்தியர்களன்றி ஏனையோர் அதன் ரகசியமுழுதும் அறிய ஏதுவில்லாமற்போயிற்று. வம்ச பரம்பரையாய் வைத்தியத்தொழில் புரிவோர் தாம் அறிந்தவைகளை தமது சந்ததியார் தெரிந்துகொள்ளும்பொருட்டு ஏட்டுப்பிரதிகளில் எழுதிவைத்தவைகளே எஞ்சிநின்று தற்காலம் பயன்படுபவையாயின.

தமிழ் வைத்திய சிகாமணிகளே! மேற்சொன்ன இடையூறுகளுக்கிடையேயும் நம் வைத்தியமானது மற்ற வைத்தியங்களைவிட உன்னத நிலையிலிருப்பதால் இதன் சிறப்பைப் பாராட்டி நமக்குள் பாகுபாடில்லாமல் ஒற்றுமையுடனிருந்து நம் தொழில் முற்காலத்திலிருந்ததைவிட பன்மடங்கு சிறப்புறச்செய்து நமது தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கருதுவோமாக.

ஆசிரியன்.



## "சித்தன்" காரியாலயத்திற்கு வரப்பெற்ற மாற்றுப் பத்திரிகைகள்.

| | | |
|---|---|---|
| பாரிஜாதம், | மாத வெளியீடு | உடுமலைபேட்டை. |
| மதுரமித்திரன், | வார வெளியீடு | திருச்சிநாப்பள்ளி |
| சிவநேசன், | மாத வெளியீடு | பலவான்குடி. |
| ஞானபோதினி | ஷை | புதுச்சேரி. |
| ஜெய லக்ஷ்மி | ஷை | மதராஸ். |
| தொழிலாளர் / கல்வி உலகம் | மாதமிருமுறை | ஷை |
| இளந்தமிழன் | மாதப்பதிப்பு | விழுப்புரம். |
| லீடர் | மாதமிருமுறை | திருச்சிநாப்பள்ளி |
| ஈழகேசரி. | வாரப்பதிப்பு | யாழ்ப்பாணம். |
| சுதந்திரன் | ஷை | இரங்கோன் |
| தமிழ்த் தொண்டன் | ஷை | மதுரை. |
| மாதவ மித்திரன் | மாதப் பதிப்பு | கும்பகோணம். |
| பத்ஹுல்இஸ்லாம் | ஷை | மதராஸ். |
| கவிதா மண்டலம் | மாத வெளியீடு | புதுச்சேரி. |
| செங்குந்த மித்திரன் | ஷை | சென்னை. |
| லேகியத் தொண்டன் | ஷை | ஷை |
| ஜகன்மோகினி | ஷை | திருவல்லிக்கேணி, சென்னை. |

குறிப்பு:— சித்தன் பத்திரிகைக்கு மனமுவந்து மதிப்புரை யனுப்பிய பத்திரிகாசிரியர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனம் உரியதாகுக.

ஆசிரியன்.

# செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை.)

மாதுவதனம்பொற்குடம்சந்திரவிம்பம்
மருங்கோரிலக்கணம்சிவந்தவிதழொரு
பிரபந்தந்தமினிய திருமானிலங்கையு மதுவே
கோதிலாக்குற்றலாதர்தம்மனைவிபெயர்
கொண்டசிங்காரமதனைக்கொண்டலென்றுஞ் செழுங்
குமுதமென்றுங் கிளிக்குஞ்சென்றுமினை செப்பலாம்
காதுவள்ளைமைக்கண்கருங்குவளைசொர்ணக்கழுத்து
வளையாகுமவளைக்கமலத்திருப்பவளையொப்பென
வுரைக்கலாங்கைவளைகிலுங்கவணைவாய்
தாதுலவுவண்டளவமாலிகாபரணசபாரஞ்சிதப்ரபாவ
தமிழின்மகாகும்பமாமுனிக்கிணையாகிய
விதரணிகாபங்கயாசனத்திருமேவிய
சயிலபுயாவெங்கடேசரெட்டமபூபதியே

(கடிகைமுத்துப் புலவர்.)

(இ-ள்) மகரந்தப் பொடிமிகுதியாகவுடைய முல்லை மாலையை ஆபரணமாகத் தரித்தவனே! சபைக்கு மகிழ்ச்சியைச் செய்பவனே! கீர்த்தியையுடையவனே! தமிழில் மேன்மைதங்கிய அகஸ்திய முனிவருக்கு சமானமாகிய விற்பத்தியுடையவனே! தாமரையை ஆசனமாகவுடைய விரலெக்ஷ்மியை மலைபோலும் புஜத்திலுடையவனே! வெங்கடேசர எட்டமசக்காதிபனே! மாதுவனம் — மா—துவ—தனம் — பெருமையுற்ற இரண்டாகிய முலைகள்; பொன் குடம் — சுவர்ண கும்பங்கள்; மாது வனம் — இந்தபெண்ணின் முகம்; சந்திர விம்பம் — மதியின் வடிவத்தையுடையது; மருங்கு — இடையானது; ஓர் இலக்கணம் — நன்னூல் அதாவது நல்ல நூலைப்போல் சன்னமானது, சிவந்த இதழ் — சிவந்த அதரங்கள்; ஓர் பிரபந்தம்; கோவை கொவ்வைக்கனிகளுக்கு சமானமாகும்; தந்தம் — பற்கள்; திருமால் நிலம் — விஷ்ணுவின் உரிய நிலமாகிய முல்லை அரும்புகளுக்கு சமம் ஆகும்; கையும் அதுவே — கைகளும் அந்த திரு—மான் இல்லம் — லக்ஷ்மி தேவியின் வாசஸ்தானமாகிய தாமரை மலரை ஒக்கும்; கோது இல்லா குற்றுல நாதர் தம் மனைவி பெயர் — குழல்வாய்மொழி அதாவது குழல் வாய் மொழி, கொண்ட — உவமையாகக் கொண்ட; சிங்காரம் அதனை — அழகினை; (முறையே) கொண்டல் என்றும் —(குழலாகிய கூந்தலுக்கு) மேகத்தின் கரிய நிறத்தையுடையது என்றும்; செழும் குமுதம் என்றும் — கொழுமையாகிய (வாய்க்கு) குமுத மலர் என்றும்; கிளிக்குஞ்சு என்றும்—(மொழியாகிய பேச்சுக்கு) கிள்ளையினுடைய குஞ்சின் மொழி என்றும்; இணை செப்பலாம்—ஒப்புமை சொல்லலாம்; பின்னும் காது வள்ளை — காதுகள் வள்ளைக்கொடியாகும்; மை கண் கரும் குவளை — மையைப்போன்ற நேத்திரங்கள் நீலோற்பலங்களுக்குச் சமானமாகும்; சொர்னம் கழுத்து வளை ஆகும் அவளை — அழகிய கண்டம் வலம்புரிச்சங்கின் அழகினை உடையவளுமாகிய அவளை; கமலத்து இருப்பவளை ஒப்பு என உரைக்கலாம் — தாமரை மலரிலிருக்கின்ற லெக்ஷ்மிதேவிக்குச் சமானம் என்று (ஒருக்கால்) சொல்லலாம்; (அப்படிப்பட்டவளை) கை வளை கிலுங்க அணைவாய்—கையில் அணிந்துகொண்டு இருக்கும்படியான வளையல்கள் சப்திக்கும்படி அணைவாயாக.



வனவாருதிக்குமிருதனமுலைமக்கண்ணுமாவாகும்
வனிதைக்கரும்பாம்வசனமுந்தசனமும்வதனமு
முழந்தாளுமாமதிதனக்குநிகராம்.
கனகாம்பரன்றனக்கனையென்றமகிமையைக்
காட்டுமதுவேபுயமதால்கன்னற்சிலைக்குமொரு
வாளியெனவந்தவன்கைக்கம்புகந்தரமதாம்
அனவாகனன்றேவிபெயரொன்றின்முதலெழுத்ததிலே
பழக்கமதலால்அப்பாவிரண்டெழுத்தாகும்
வடிவழகின்மலரணைமீதுவந்தணைகுவாய்
தனகுபேரப்பாக்யசம்பன்னகுருயோக்யசற்குணவிலாசவாக்ய
தமிழின் மகாகும்பமா முனிக்கிணையாகிய
விதரணிகா பங்கயாசனத்திருமேவிய
சயிலபுயா வெங்கடேசரெட்டம பூபதியே.

(கடிகைமுத்துப் புலவர்)

(இ-ள்) செல்வத்தில் குபேரனே! யோக்கியதையில் மிகுந்தவனே! நல்லகுணத்தை உடையவர்களது சமூகத்தை யுடையவனே! சத்தியசந்தனே! .... .... ...
வனம் வார் உதிக்கும் இரு தனமும் மா ஆகும் — அழகிய கச்சினிடத்தினின்று தோன்றும் இரண்டு முலைகளும் யானையின் மஸ்தகத்திற்கு சமானம் ஆகும்; மை கண் உம் மா ஆகும் — கரிய கண்களும் மாவடுவின் வகிருக்குச் சமானம் ஆகும்; வனிதைக்கரும்பு ஆம் வசனமும் — பெண்ணினுடைய மொழி கரும்பின் (சாற்றைப்போல) இனிமையுடையதாகும்; அரும்பு ஆம் தசனமும் — பற்கள் (முல்லை) அரும்புக்குச்சமானம் ஆகும்; வதனமும் மா மதி தனக்கு நிகர் ஆம் — முகம் பெருமைதங்கிய சந்திரனுக்குச் சமானம் ஆகும்; முழந்தாள் உம மா மதி தனக்கு நிகர் ஆம் — முழங்காலும் பெருமை தங்கிய (அலவன்-மதி) நண்டுக்குச் சமானம் ஆகும்; அரன் தனக்கு அனை கன காப்பு — சிவனுக்குத் தாய் மேன்மையாகிய மூங்கில் என்று சொல்லலாகும்; புயம் அது காப்பு என்ற மகிமையைக் காட்டும் ஆல்— தோள்கள் மூங்கிலுக்குச் சமானமென்று சொல்லும் மேன்மையுடையது; கல நல் சிலை கு ஒரு வாளி என வந்தவன் கை கப்பு கந்தரம் அது ஆம் — மேரு மலையாகிய நல்ல வில்லுக்கு ஒப்பற்ற பாணம் ஆய் இருந்த விஷ்ணுவின் திருக்கரத்திலுள்ள பாஞ்ச சன்யம் என்னும் சங்கு கழுத்துக்கு உபமானம் ஆகும்; அன வாகனன் தேவி பெயர் ஒன்று — அன்னத்தை வாகனமாக உடைய பிரமனின் தேவியாகிய சரஸ்வதியின் பெயர் ஒன்று பாரதியாகும். (அந்த பாரதி என்னும் பெயரின்) முதலெழுத்து அதிலே பழக்கம் — பா ஆகிய பாட்டினிடத்தில் பழக்கமுடையவன் ஆகும்; வடிவ அழகில் அப்பால் இரண்டாகும் — உருவத்தின் அழகிலே (பாரதியென்னும் பதத்தின்)பின் இரண்டெழுத்தாகிய ரதி தேவி என்று சொலலத்தக்கவள் ஆகிய இவளை; மலர் அணை மீது உவந்து அணைகுவாய் — பூவணையின்மேல் விருப்பங்கொண்டு அணைவாயாக.

(தொடரும்)



# திருப்பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களும் — சீட்டுக்கவிகளும்.

(கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.)

(181-ம் பக்கத் தொடர்ச்சி.)

இராமபட்டினம் ஜமீன்தார், கனம்
நந்தகோபால எர்ரைய துரையவர்கள் மீது
பாடியன:-

I.

திடகடன மயிலில் வரு சிவசயில குமரகுரு
திவ்ய கருணை விலாசம்

செயதவள சரஸ்வதி கடாட்சப் பிரசன்ன குண
தீப மதுரப் பிரவாகம்

சிற்றறிவு வுளுத்தனைத் தினமும இல்லாத
தீர்க்க வைராக்ய சித்தம்

சேதுபதி சமூக மெச்சிய மாம்பழக் கவிச்
சிங்க மெழுதிய பாசுரம்

மடல்வனிதை மலர்வனிதை மருவு சபகர ரண
மகர குண்டல கிரீட

வர்ண கேயூர சர்வாபரண ரூபலா
வண்ய சற்புண்ய தேகன்

... ... ... ...

தடகரட விகடதட சமர குஞ்சர துரக
தள துரந்தர கிரீடி

தமிழருமை யவாவர் தராதர மெலாமுணர்
தயாள சம்பன்ன கனவான்

சரச மிருது வசனநிதி ராமபட்டண சம்ஸ்
தான சக்ராதி பத்ய
சௌபாக்ய துரைநந்த கோபால வர்மைய
சாமி யெதிர்கொண்டு காண்க;
கடலுலகில் நிறைநீதி நாட்டி யிசைநீட்டிக்
கதிக்கின்ற வுனது பேட்டி
கண்டு வெகு நாளான காரணத்தா லுனைக்
கருதியே யிங்கு வந்தோம்
கவிதைப் பிரசங்கங்களைச் செவிமடுத் துட்
கருத்தினை விசாரித் துடன்
காரிய முடித்தே யனுப்புவது நின் கடமை
கைக் கென்னவுப சாரமே.

(குறிப்பு:- சிவசயிலம்-சிவகிரி; பழநி மலை. தவளம்-வெண்மை. உலுத்தர்-உலோபிகள். மடல்-பூவிதழ். வனிதை-பெண்; நாமகள். கேயூரம்-தோளணி. தடாரடம்-மிகுதியான மதம்; (யானைக்கு) விகடம்-வேறுபாடு. சமரம்-போர். குஞ்சரம்-யானை. துரகம்-குதிரை. தளம்-படை. தராந்தரன்-பூமியை ஆளுகின்றவன். கிரீடி-அரசன். சக்ராதிபத்யம்-சக்கிரம்-பூமி. ஆதிபத்யம்-சுதந்தரம் அல்லது அதிகாரம்.)

## II.

### பதினறடி ஆசிரிய விருத்தம்

மாமேவு விபவ வருடத்தி லிவ்வூ ருக்கு
வந்திருந் தோங் கணக்கு
வருட மேழாச்சு ததுமுத லாகவிது வரையில்
வரவில்லை யேனென் னிலோ
மகிழ் சமய சஞ்சீவி யென்றனது சமுகத்தை
மனதில் மெத்தவும் நம்பினேம்



மற்றுள சமீன் தார்கள் பக்கத் திலுக்கு நாம்
வருடந் தோறுஞ் செல்லுவோம்
நாமேவு நின்னை யப்படி நச்சினேமா?
பழக்க மீயறி யாததோ!
பாடியில் போ இங்கு வந்த தேதுக் கெனிற்
பகருகின் றோ மினிது கேள்
பரவு பிரஜோற்பத்தி வருடந் தொடங்கி யிப்
பலவருட காலம் வரையிற்
பலவகைத் தொந்திரைகளா லொரு பிரபுக்களின்
பாலும் பிரவேசி யாமற்
பாமேவு பழனியிற் றானே யிருந்து வீண்
காலங் கழித்திட்ட தால்
கலி தொடர்ந்தது சகிக்காது உஞ் சாரமே
கருதினேம் அது தீர்ப்பதன்
கடமையே யில்லா விடிற் சவாரிக்குவா
கனமுதலல் வேண்டு முதவிற்
கனதூர தேசந் திரிந்தேது மெண்ணி யுன
காரியத்தை நிறை வேற்றுவோம்
காமேவு மலரவர்கள் நல்குகொடை முழுதும் நீ
நல்கு கொடையாக முடியும்
சமதருமை யிங்கே செலாவிடிற் பின்னிந்த
நாட்டி லெவரறிவார் நமை
நாட்டு சற்கீர்த்தியே பெரிது சிறிதுந் தவனை
தவிலாம லருள் செய்குவாய்
நம்மை பூமாது தமிழ்மங்கை சேர் யோக அய
ந்த கோபால துரையே.

(குறிப்பு:— மாமேவு-இலக்குமி வீற்றிருக்கும். சமய சஞ்சீவி-காலத்திலுதவும் அருமருந்து. நாமேவு-நாவில் வீற்றிருக்கும் (கலைமாது) பரவு-புகழ். காமேவு-பாதுகாப்பு. மிகுதியான. கலி-சிறுமை. பூமாது-இலட்சுமி. தமிழ் மங்கை-நாமாது.)

இச்சீட்டுக்கவியில் மாம்பழக் கவிராயரவர்கள் தமக்கு வறுமையுற்றதை நிவர்த்திக்கும்படி செல்வமும் ஈகையும் மிகுந்த ஜமீன்தாரரை வேண்டுவது விளக்கமாவதோடு, இவர் கி. பி. 1869-ஆம் ஆண்டு அதாவது தமிழ் விப வருடத்தில் இராமபட்டினம் ஜமீன்தார், சந்திரகோபால எர்ஸ்ரய துரையவர்களை பேட்டி காணச்சென்றதும் புலனாகின்றது. இதற்கு முன் முறை கவிராயர் அங்கு சென்ற காலம் இன்னதென அறியக்கூடாமல் இருக்கிறது. இரண்டாம் முறையும், மூன்றும் முறையும் அங்கு தாம் சென்ற காலங்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர். விப வருடத்திற்கு ஏழாவது ஆண்டு பவ வருடம் அதாவது கி. பி. 1875-ம் வருடத்தில் மூன்றும் முறை சென்றனரென்பது அறியப்படுகிறது. 'பரவு பிரஜோற்பத்தி வருடந்தொடங்கி யிப்பவ வருடகாலம் வரையிற்' என்ற சொற்றொடரால் இவர் கி. பி. 1872-ம் ஆண்டு முதல் 1875-ம் ஆண்டு வரை எங்கும் யாத்திரை செல்லாமல் பழநியிலே தங்கியிருந்தாரென்று தெரிகிறது. இங்ஙனம் யாத்திரை செல்லாததனால் வருவாயின்றி வறுமை தம்மைப் பிடித்ததாகக் குறிக்கின்றனர். இவ்வறுமை ஒழிவதற்கு பிரபுக்கள் வசிக்கும் தூரதேசங்கட்கு யாத்திரை செல்வதற்கு வாகனம், வண்டி, வழிச்செலவுக்குப் பொருள் முதலியன உதவும்படி ஜமீன்தாரரைக் கேட்பதே இச்சீட்டுக் கவியின் கருத்து. ஜமீன்தாரர் கவிராயரவர்கள் விரும்பியவாறே அனைத்தும் உதவி அவரை வழிவிடுத்தார்.

## III.

## சீட்டுக்கவி

காலால் நடந்துவரு கவிராஜ ருக்கொரு
கணக்கு;நற் குதிரை யேறுங்
கல்விமான் கட்கொரு கணக்கு;வண் டியில்வருங்
கவிவலர்க் கொரு கணக்கு;



கனபெட்டி வண்டியுள வித்வான் களுக்கொரு
கணக்கு;மே னாவில் வந்த
கவிஞரா னோர்க்கொரு கணக்கு;ச் சிபாரிசுக்
காகிதங் கொண்டு கண்ட
மாலான புலவருக் கொருகணக் கு;ச் சால்வை
வஜ்ரக் கடுக்கன் முருகு
வாய்ந்தகெண் டைச்சோம னுருமா லணிந்திட்ட
வாணருக் கொரு கணக்கு
மற்றுமிப் படியே வழக்கமிப் போதுசில மனிதர்
தருகின்ற வரிசை
வயணடம் பங்களை மதிப்பதே யலதுதமிழ் மகிமையா
வரு மறிவ ரோ
மேலான கல்வித் தராதரம் பார்த்துதவு விஜயகர்
ணாவ தார
விற்பன்ன நீயன்றி வேறொருவ ரிலை யென்று
மிகவுநினை யேநம்பி னேம்
மேட்டில்விட் டாலுநின் பெருமையே பள்ளத்தில்
விட்டாலு நின்பெரு மையே
கோலாக லக்கீர்த்தி குறையாத செல்வங்
கொடுப் பவர்களேயு யுயர்ந்தோர்
கூர்ந்துகல் லோர்தமக் கருளுவது கருடன்
குலாவுகாற் றிகச்ச மாகும்
கோகனக வனிதைகுடி கொண்டமணி மார்பருங்
குமகளப புய பூதரா!
குணராம பட்டண சமஸ்தான கனகந்த்
கோபால புவனேந் திரனே.

(குறிப்பு:— வயணடம்பம் – வகையான ஆடம்பரம். கர்ணாவதாரன்–கர்ணனைப்போன்ற ஈகையன். குலாவு–பிரகாசம். கோகனகவனிதை – மலர்மடந்தை. பூதரா – மலையைப்போன்றவனே! புவனேந்திரன்–பூலோக இந்திரன்.)

இச்சீட்டுக் கவியில், காலால் நடந்து வரும் கவிராயர்; குதிரையேறுங் கல்விமான்; வண்டியில் வரும் கவிவல்லார்; பெட்டிவண்டியுள்ள வித்வான்; மேனாவில் வரும் கவிஞர்; சிபாரிசுக் கடிதத்துடன் வரும் பெருமை மிக்க புலவர்; சரிகைச்சால்வை, வயிரக்கடுக்கன், முருகு, சரிகை வஸ்திரம், உருமால் ஆகியவற்றை ஆடம்பரமாயணிந்த வாணர், ஆகிய அவ்வத்தகுதியுடைய புலவர்களுக்கு அவரவர் அந்தஸ்துக்கேற்ப வரிசையளிக்கும் இவ்வழக்கம் இன்றைக்கு 99-ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழ்நாட்டில் ஜமீன்தாரர்களிடத்தில் வழக்கத்தில் உள்ளதென்பது குறிக்கப்பட்டுள்ளது.

தக்காரிடத்தில் சிபாரிசுக்கடிதம் பெற்றுவந்து பிரபுக்களைக்கண்டு சன்மானம் பெறும்வழக்கம் புதிதல்லவென்பது இதனால் புலனாகின்றது. இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முந்தியே பெரிய மனிதரிடத்திலிருந்து சிபாரிசுக்கடிதம் பெற்று, குறிப்பிட்டவரைக்கண்டு காரியத்தைச் சாதித்துக் கொள்ளும்வழக்கம் தமிழகத்திலமக்களிடத்தில் வழக்கத்தில் இருந்ததென்றால் தற்காலத்திலிருப்பது அதிசயமேயல்ல.

(தொடரும்)


## பத்திரிகை வருகிறதா?

பிரதி மாதமும் தவறாமல் "சித்தன்" அனுப்பப்படுகிறது. இத்துடன் 7-பிரதிகள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கலாம். அதன் வருடச்சந்தா அணு 8. மிகக்குறைந்த கட்டணம். இதைக் கூடிய சீக்கிரம் அனுப்பும்படி சந்தாநேயர்களைக் கேட்டுகொள்கிறோம்.

மானேஜர், "சித்தன்," பழனி.




# குடிகெடுத்த கள்.

(T. D. சுப்பிரமணியம்,)
கலையம்புத்தூர், பழனித்தாலுகா.

(151-ம் பக்கத்தொடர்ச்சி)

[கதையின் முன் சுருக்கம்:- அமுதபள்ளி அப்பாவு பிள்ளையின் மகன் ராசலிங்கம் பஞ்சமா பாதகங்களுள் தலையாய குடிப்பழக்கத்தைக் கொள்ளுதல்—பெரியண்ணன் என்ற துஷ்டனது சகவாசத்தால் தன்னைக்கண்டித்துவந்த தன் தகப்பனையும் கொலைசெய்தல்--சகல சொத்துமிழந்து பணத்திற்காகக் கொள்ளைக்கூட்டம் தயார்செய்தல்—லேவாதேவி செய்துவந்த மம்முசா ராவுத்தரிடம் தன் மனைவி முத்துலக்ஷ்மியை ஜாமீன்போல வேலைக்கு அமர்த்திக் கடன் பெறுதல்.]

உத்தமியாம் முத்துலக்ஷ்மி ராசனுக்குப்புத்தி சொல்லிப்பார்த்தாள். என்ன சொல்லியும் குடியால் மதிகெட்ட ராசன் மாறவில்லை. கண்ணீர் விட்டுக் கதறி நின்று "எத்தனை நாட்களாய் தங்களை வேண்டினேன். துஷ்டசகவாசம் பாழ்படுத்தியது. இன்னும் கேடில்லை. அவனுடன் சேராமல் விட்டிருங்கள். கூலிசெய்து உழைக்கிறேன். இனிமேலாவது சுகமே வாழ்வோம். பால் மணம் மாறாத தங்கள் செல்வனைப்பார்த்தேனும் மனம் திரும்பாதா? வேண்டாம், வேண்டாம். என்னைப் படுபாவி ராவுத்தனிடம் அடகுவைப்பதுபோலல்லவா செய்கிறீர்கள். உலகு ஏசும்' என்று விம்மிப்பொருமி முகம் பார்த்துக் கேட்டவைகள் உண்மையில் சற்று ராசனையும் தயங்கச் செய்தது. சிறிது சிந்தித்து நின்றான். மதிமயங்கி குடிப்பயித்தியம் கொண்ட அவன் புத்தி கலைந்தது. 'கடஎன் பின். சத்தியமாய் 4, 5 மாதங்களில்

ஏராளமான பணத்துடன் வந்து உன்னை மீட்பேன்' என்று கூறி தர தரவென முத்துலக்ஷ்மியை ராவுத்தரிடம் இட்டுச் சென்றான்.

காரியம் பலித்தது. இனி சுகம் தான். பாவம் குடி வெறியால் ராசன் பெரியண்ணன் சொற்படி ஆடினான். கொள்ளைக்கு ஆரம்பித்துவிட்டனர். பல பேர் சேர்ந்தனர். 20-ஆண்டுகளும் சென்றன. ராசன் கைதேர்ந்த கொள்ளைக்காரனானான். கொலை செய்வதும், அஞ்சாமற் பலபேரைக் கற்பழிப்பதும் ஆகியவைகளில் கைகலந்தனன். ஆயிரம் ஆயிரமாய்ப் பணம் பறித்தனன். பணம் கையில் சேரச் சேர பல வழிகளிலும் துன்மார்க்கம் விரிந்தது.

அக்ரமங்களுக்கெல்லாம் தலையான ராசன் தன் மனைவியை மீட்கவும் மறந்தான். தன் சிறு பாலனையும் நினையான். கெடுவும் தீர்ந்தது. அதுவரை தன் கணவன் வராது கண்டு முத்து மயங்கினாள். ராவுத்தன் முன்போலன்றிச் சுபேச்சையுடன் பெண்டாளவும் முயன்றான். அந்தோ! கதிவேறின்றி தன் 2 வயது பாலனை ஓர் கிழவியிடம் விட்டு விட்டு முத்துலக்ஷ்மி உயிர் நீத்தாள்.

கிழவியும் பையனை வளர்த்து வந்தாள். கிழவியின் பயன் வீணாகாது பையன் வளர்ந்து தன் புத்தியாலும் வல்லமையாலும் ஓர் போலீஸ் இன்ஸ்பெக்டரானான். சர்க்காரில் ராசனைக்கண்டுபிடிக்க பலபேர் நியமிக்கப்பட்டனர். அவர்களுள் ராசனது மகனும் ஒருவன்.

"தெய்வம் நின்று கொல்லும்." ராசனுக்கும் பெரியண்ணனுக்கும் ஓர் பெண் விஷயத்தில் சச்சரவுஏற்பட்டது. ஒருவரையறியாது ஒருவர் அவளைப்பெண்டாள எண்ணினர். ஒரு மாலை வேளை. ராசன் ஓர் ஆற்றங்கரையோரமாய்த் தனியாய்ச் சிந்தித்தபடி நடந்து மெள்ள போய்க்கொண்டு



189920

இருந்தான். பின்புறம் பெரியண்ணனும் அவனை அறியாது தொடர்ந்து மெள்ள சத்தமின்றி ராசனைக் குத்த ஓங்கினான். உடனே தன் கையை பின்புறமிருந்து யாரோ பிடித்துக் கொண்டதையும், தன்னைச்சேர்த்துக் கட்டிப்பிடித்ததையும் உணர்ந்தான்.

ஓசைகேட்டு ராசன் திரும்பிநோக்கினான் விளங்கவில்லை. வந்தவன் பெரியண்ணன் ராசனைக்குத்தாதபடி பிடித்துக்கொண்டதைச்சொல்ல ராசன் பொங்கி எழுந்தவனாய் நேரேகுத்தாய் "அடே பாவி! உண்ட வீட்டிற்கு இரண்டு நினைப்பவனே!" எனக்கூறியவண்ணம் பெரியண்ணனைக் குத்தி வீழ்த்தினான். தன் எதிரில்நின்ற புதியவனை "யார் ஐயா நீங்கள் என் உயிரைக்காத்த புண்ணியனே" என்றான். வந்த மனிதன் ராசலிங்கமும், பெரியண்ணனும் செய்துவரும் கொள்ளையை நிறுத்தவும், அவர்களைக்கண்டுபிடித்துத் தண்டிக்கவும் சர்க்காரால் நியமித்துள்ள அநேக போலீஸ் உத்தியோகஸ்தர்களுள் நானும் ஒருவன் என்றான். அவனை ராசன் சொந்த ஊர் முதலிய வரலாற்றை விசாரிக்க, வந்தவன் தன் மகனே என உணர்ந்தான். உடனே அவனது தலை "கிர்" எனச் சுழல்வதுபோலத் தோன்றியது. "மளமள" வென அவனது கண்களில் ஜலம் வந்தது. அப்பா! நீ தேடியலையும் பாவி நான் தான். மேலும் உன் தகப்பனும் நானே. மகா கொலைகாரன். குடிகாரன். எனக்குக் கதி இடையாது. புண்ணியனே உன் தாயாம் உத்தமி முத்துலக்ஷ்மியால் நீ முன்னுக்குவந்தாய். புண்ணியவதி அவள் உயிர் நீத்தாள். உன்னைக்காத்துவந்த கிழவியிடமும் அக்குடும்பத்தாரிடமும் விசுவாசமாயிரு. தெய்வம் ஒன்று உண்டு. ஐயோ! உன் முகத்தில் விழிக்கவும் கூசுகிறதே! எனத் தட தட என்று கூறியவனாய் ராசலிங்கம் தன் மார்பூடு கத்தியைப் பாய்ச்சிக்கொண்டு வீழ்ந்திறந்தான்.

முற்றிற்று.

# நவீன அகராதி

(ஸ்கெலிடன்.)

சு. ம. — சுத்தமான மனிதன்; சுத்தமான மதம்; சுதந்தர மயம்; சுந்தரமும் மதியும்.

மே. த. கவர்னர் — மேய்க்குந்தந்திர சாலிய கவர்னர்.

சி. ஆர். தாஸ் — சிங்கம்போல் ஆர்ப்பாட்டஞ் செய்யுந்தாஸ்.

மோ. க. காந்தி — மோதிரத்தைக் கழற்றச்சொல்லுங்காந்தி.

ஈ. வே. ரா. — ஈட்டிபோல் வெட்டித்தள்ளும் ராஜன்.

வ. மே. மகாநாடு — வம்பர் மேவிய மகாநாடு.

சர். சி. பி. — சர்க்கார் சிரேஷ்டப்பிள்ளை.

அ. இ. கா. க. — அழுதழுது இளைத்துப்போன காங்கிரஸ் கட்சி.

பி. ஏ. — பின்னால் ஏழை; பிறந்தது ஏன்? பிழைப்பு ஏது?

எம். ஏ. — எல்லாம் ஏப்பம்; எம்மை ஏசாதீர்.

ஐ. பி. — ஐயோ பித்தலாட்டமே; ஐயோ பிழைப்பே,

சி. பு. கோ. — சிறுபிப்புழுக்களின் கோஷ்டி.

இ. பி. கோ. — இங்கிலீஷ் இல்லையென்றால்பிழைப்புகோவிந்தா

வக்கீல் — வாய்த்திருடர்; பகல் தாசி; விவகாரக்களஞ்சியம்.

குமாஸ்தா — எடுப்பார் கைப்பிள்ளை; தினந்தினத்தோம்: ஊமை; இள்ளுக்கீரை.

உபாத்தியாயர் — வாயில்லாப்பூச்சி; அப்பாவி; திக்கற்றபிள்ளை

ஷராப் — குங்குமஞ் சுமந்த கழுதை.

பிச்சைக்காரன் — தம்பிடி கடன்காரன்; கும்பிடும் கள்வன்.

ஈரோட்டு ராமசாமி — 20-ம் நூற்றாண்டு கலினி முகம்மது; அடிமுடாவிலே கைபோடுபவர்; கிழச்சிங்கம்; கடவுள் வைரி; துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலினி; மதக் கோடலி; நாத்திகபூஷணி.



ஸ்தலஸ்தாபனம் — குஸ்திக்களம்; மனஸ்தாப நிலையம்; அக்கப்போர்.

ஆங்கிலப்பட்டாதாரி — ருதுவான பெண்; எட்டாக்கனி; டம்பாச்சாரி; ஆற்றில் கரைத்த புளி; கண்ணாடி.

கடவுள் — அறியாமை; பித்தம்; சர்வ சூன்யம்; இருள்; பாலைவனம்; கனவு; வழுக்கல்.

மதம் — காட்டுப்பாதை, முள்வேலி, பாஷாணம்; சமூக நோய்; கால் விலங்கு; பாறை.

மோக்ஷம் — கெட்டிக்காரன் புளுகு; பூச்சாண்டி.

தமிழ்ப்பண்டிதர் — செல்லாக்காசு; தரித்திர நாராயணன்; கர்நாடகம்; இறைந்த தலை.

சோதிடம் — மனப்பால்; ஏட்டுச்சுரை; ஆகாயக்கோட்டை.

திருவிழா — காதலர் சந்திக்கத்தகுந்தநாள்; காசுக்குப்பிடித்த சனியன்.

கோவில் — துன்மார்க்க நிலையம்; மோசம் போகுமிடம்; கொள்ளையடிக்குமிடம்.

எலெக்ஷன் — துருப்பிடித்த காசெல்லாம் வெளியேறும் புனித நாள்; போட்டி விழா. தெருக்கூத்து; நாற்காலி வேட்டை.

மந்திரி — ஊர் விருந்தாளி; அஸ்திவாரம் போடுங்கொத்தன், மின்சாரந்திறக்கும் இஞ்சினீயர்; பூமாலை சுமைதாங்கி; சுகவாசி.

அமாவாசை — அப்பளம், வடை, பாயாசத்துடன் தொந்தியை நிரப்புதல்.

தீண்டாமை — உடன்பிறந்தே கொல்லும்வியாதி; நல்லபாம்பு

ஆபரணம் — பெண்களுக்கு மயக்க மருந்து.

காணிக்கை — முதலில்லா வியாபாரம்: ஏமாற்றும் வித்தை

பஜனை — பிரசாதக்கூத்து; வெட்டிவேலை; பொழுதுபோக்கு.

(தொடரும்)

# நூதன அநுபவ அலங்கார ரத்னம்.

(திரு. மு. கா. அம்பலவாணன் அவர்கள்.)
சமஸ்தான வித்வான், இடையகோட்டை.

186-ம் பக்கத் தொடர்ச்சி.

கவுண்டர்களிற் சிலர் கடன் வேதனையாற்
கஷ்டப் படுவது என்?

உடனுடன் வேலை செய்தவர் கூலி
உதவா ததினால். (35)

நாட்டினிலே பல கோர்ட்டுகளெங்கும்
நாட்டிய நன்மைய தேன்?

நாட்டிக மானவர் ஏழையர் பொருளைத்
தவறுப் பரித்ததி னால். (36)

மெலிந்தார் தன்னை ஒடுக்கி மிகவும்
நெருக்கி விரட்டுவ தேன்?

தளர்ந்தார் காணாதே புறம் சொல்லிச்
சாற்று தற்கே. (37)

இறப்பார் தன்னிடம் பௌர்சம் பேசி
இழிவு படுத்துவ தேன்?

சிறப்பாய்க் கல்வியறிவு சிறிதும்
சேர்மை யிலாததி னால். (38)

ஊரில் பிச்சைக் காரர்களெங்கும்
உலாவிப் பெருகுவ தேன்?

தரிச் சுத்தும் ராட்டின நற்றொழில்
தயக்கம் பெற்றத னால். (39)



அரசியற் றுறைகளிற் பெரிய மனிதர்கள்
அலைத்தற் படுவது என்?

விபரமதான பலதுறைப் புள்ளி
விபரம் கண்டத னால். (40)

அரவுயர்த் தவன் செல்வமனைத்தும்
அழிந்து போனமை என்?

தரும புத்திரன் பங்கைக் காவல்
தான் பெற்றுயர்ந்த தினால் (41)

இரணியன் சூதனும் துருவனும் நந்தனும்
ஏற்றம் பெற்றது என்?

தரணியி லவர்க்கு முருகி வளர்ந்த
தத்துவ உறுதியி னால். (42)

பாரத பூமியிற் பெரியர்களிற் சிலர்
பாக்கியம் பெற்றது என்?

மூதறிவு வளர் கல்விப் பெருக்கில்
முதன்மையைப் பெற்றத னால். (43)

தேசாதேசம் திரிந்தும் கரணம்
தெளிவு பெறாதது என்?

ஆசா பாசம் நிறைந்து புன்றொழில்
ஆக்கம் பெற்றத னால். (44)

மனமது இருந்தும் கொடுக்க முடியாது
மயக்கம் கொள்வது என்?

இனமாம் விட்டிற் குரங்கைக் கட்டிய
இயல் பதனால். (45)

(முற்றிற்று.)

# மாதர் பகுதி.

## விவாக ரத்து.

(தோழர். A. B. ஆதித்தர்)

இந்த தலையங்கத்தின்கீழ் தோழர் M.K. பாலசுப்பிரமணியம் B.A. B.L. அவர்கள் "குடி அரசு" பத்திரிகையில் நீண்ட கட்டுரை ஒன்று வெளியிட்டுவந்தார். இப்பால் அஃது 'விவாக விடுதலை' என்னும் பேரால் புஸ்தகமாக வெளிவந்திருக்கிறது. 8-11-31. குடி அரசில் ஷை கட்டுரையின் கடைசியில் நம் நாட்டுக்கும் விவாக விடுதலை அவசியமென்பதும், ஆனால் ருஷ்யாவைப்போல் அதிதீவிர விவாக ரத்து நம் நாட்டுக்கு வேண்டாமென்பதும், இங்கிலாந்தைப் போல் மிதமான விவாகரத்தே அவசியம் வேண்டுமென்பதும் அன்னார் கூற்றாகும்.

ஆம்; ருஷ்யா தேசத்தில் வார்சா நகரத்தில் 40-வயது சென்ற ஒரு புருஷன், தனது 80-வயது சென்ற மனைவி 30-வயதுள்ள ஒரு வாலிபனை மறுமணம் செய்துகொள்வதற்காக விவாகரத்துச் செய்யப்போவதையறிந்து தற்கொலை செய்துகொண்டான். அங்கு யாரும், யாரையும் நினைத்தநேரத்தில் விவாகம் செய்வதும், மறுகணம் செய்த விவாகத்தை ரத்துச்செய்துவிடுவதும் வழக்கமாகிவிட்டது. அதற்குமேல், விவாகமே அவசியமா? என்னும் கேள்வியும் அந்நாட்டில் பிறந்துவிட்டது. ஆனால் இங்கிலாந்தின் விவாக ரத்து எந்த விஷயத்தில் ரஷ்ய வழக்கத்துக்கு குறைந்திருக்கிறதென்று நமக்கு விளங்கவில்லை.

இங்கிலீஷ் கோர்ட்டில் ஸ்ரீமதி சாலிவெலி என்ற ஒரு பெண், புருஷன் அவளோடு பேசுவதில்லையென்றும், ஒரு



மரப்பாவையையே கையில் வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறானென்றும், ஓய்வான வேளைகளில் அப்பாவையை மடிமீதுவைத்துத் தாலாட்டி அதனுடன் பேசி நகைத்துக்கொண்டிருக்கிறானென்றும் குறிப்பிட்டு விவாக ரத்து உத்தரவு வேண்டுமென்று வழக்குத்தொடுத்து, விவாகமும் ரத்துச்செய்யப்பட்டது. சிறிய இடத்து செய்திமுதல் லார்டு வில்லிங்டன் குமாரியின் விவாக ரத்தாகிய பெரிய இடத்துச் சம்பவம் வரையும் ரஷ்ய வழக்கத்தினின்றும் அதிகம் குறைச்சலுள்ளதாக இருக்கின்றதோ என்று நாம் கேட்கின்றோம்.

இங்கிலாந்தில் ஹைக்கோர்ட்டின் விவாகரத்து பிரிவின் தலைவரான லார்டு மர்ரி மிகவும் கடுமையான வேலை செய்ய வேண்டியிருக்கிறது. திங்கட்கிழமை கோர்ட்டு கூடியதும், விவாக ரத்து வழக்குகள் 637 - எதிர்வாதமில்லாமலும், 200-வழக்குகள் எதிர்வாதத்துடனும் விசாரிக்கப்படவேண்டியதாகவிருக்கிறது. இந்நிலை நம் நாட்டிலும் ஏற்பட்டுவிட வேண்டுமோ என்று வினவுகிறோம்.

மேரி பிக்போர்டு என்ற பிரபல சினிமா நடிகர் தமது புருஷனாகிய டக்ளஸ் பேர்பாங்ஸுடன் விவாக ரத்துச் செய்துகொள்வதற்காகத் தொடுத்த வழக்கில் அசிரத்தை, கொடுமை முதலிய குற்றங்களைப் புருஷன்மீது சாட்டி சென்ற சில வருஷங்களாகவே தாம்பத்திய வாழ்க்கை அவ்வளவு சுகமாகவில்லையென்று கூறியிருக்கிறார்.

ஆவ்ரீல் நகரக்கோர்ட்டில், லேடி ஈவ்ஸ் என்ற சீமாட்டி தனது கணவன் தனது நாய்களைக் கவனிப்பதில்லையென்று விவாக ரத்து வழக்குத் தொடர்ந்திருக்கிறாள்.

இருதடவை எச்சரித்தும் குறட்டைவிடும் வழக்கத்தை விடாததற்காக ஒரு பிரஞ்சு மாது தன் கணவனிடமிருந்து தன்னை விவாக ரத்துச்செய்துகெண்டாள்.

கணவன் பூட்ஸோடு படுக்கச்சென்றதைக் கொடுமையாக மதித்தும், அறையில் விளக்கில்லாமல் படுக்க மறுத்த ஒரு பெண்ணின் செய்கையை உபத்திரவமெனக்கருதியும், சிநேகிதனுடன் நடனமாட மறுத்த மனைவிபால் வெறுப்புக்கொண்டும் சில விவாகங்கள் பிரெஞ்சுக்கோர்ட்டில் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்னும் அமெரிக்காவைப் பாருங்கள். ஐக்கிய அமெரிக்காநாட்டைச்சேர்ந்த விவாகரத்து நீதி மன்றங்களில் சுமார் 15-வருடகாலம் பிரதம நீதிபதியாக உத்தியோகம் வகித்து 20-ஆயிரம் விவாக ரத்து வழக்குகளில் தீர்ப்புக்கூறி அநுபவம் பெற்றுள்ள ஜியார்ஜ் ஏ. பார்ட்லட் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார். "பெண்கள் நிந்தனை, கொடுமை, அவமரியாதை முதலிய பற்பல காரணங்களைக்காட்டி விவாக ரத்தைக்கோருகின்றனர். உண்மையில் இதெல்லாம் காரணமல்ல. மணம் செய்துகொண்டபின்னரே பெண்களில் பலர் தாங்கள் எதிர்பார்த்ததுபோல் தங்களுடைய கணவர்களிடமிருந்து சுகத்தைப் பெறுகிறார்களில்லை. ஆகவே அவர்கள் விருப்பப்பிரகாரம் தங்களுக்குச் சுகத்தைக்கொடுக்கும் ஆடவர்களை மணந்துகொள்ள விரும்புகின்றனர். விவாக ரத்துச் செய்துகொள்ள விரும்பும் தம்பதிகள் உண்மையான காரணத்தைக் கூறுகின்றார்களில்லை. எங்களுடைய கணவர் எங்களுக்கு நாங்கள் எதிர்பார்த்ததுபோல் சுகத்தைக்கொடுக்கவில்லை, ஆதலால் நாங்கள் அவர்களுடன் விவாக ரத்துச்செய்துகொள்ள விரும்புகிறோமென்று பெண்கள் நீதிபதி முன்பு கூறமாட்டார்களென்பது நிச்சயம். ஆகவே விவாக ரத்துச்செய்துகொள்ளும் பெண்களும், ஆண்களும் விவாக ரத்தின் உண்மையான காரணத்தைச் சொல்கின்றார்களில்லை. அந்தரங்க சம்பாஷணைகள் மூலம் சில தம்பதிகளிடமிருந்து நான் விவாக ரத்தின் உண்மைக்காரணத்தை அறிந்துகொண்டேன்."



ஷியார் கூறியதுபோலவே உண்மைக்காரணம் ஒன்றாக இருக்க மற்றொரு காரணங்காட்டி ஆங்கு விவாக ரத்து வழக்குகள் நடைபெறுகின்றன.

ஒரு பெண் தன்னைத் தன்னுடைய கணவன் சிகரெட் சாப்பிடுமாறு வற்புறுத்தியதாயும், அதனால் விவாக ரத்து வேணுமென்றும் வழக்குத்தொடர்ந்து வெற்றி பெற்றாள்.

மற்றோர் பெண் தன்னுடைய கணவன் ஓயாது பேசிக்கொண்டிருப்பதால் தனக்கு மிகவும் தொந்தரவேற்படுகிறதென்று வழக்காடி வெற்றி பெற்றாள்.

அழகிய நீண்ட கூந்தலினால் பணம் சம்பாதித்து வந்த ஓர் பெண் தன் புருஷன் அந்த மயிரை வெட்டி கிராப் செய்துகொள்ளச் சொன்னதற்காக விவாக ரத்து செய்து கொண்டாள்.

'கண்ணாட்டி' என்று தன்னை அழைக்காததற்காக ஒரு பெண் தன் கணவனிடமிருந்து விவாக ரத்துச் செய்து கொண்டாள்.

நீலாகிராம் குக் (நீலாகாமினி தேவி) மிஸ்டர் ஆல்பிரட் ஹட்சின்ஸ் என்ற மாஜி கப்பல் உத்தியோகஸ்தருடன் செய்துகொண்ட விவாகத்தை ரத்துச்செய்ய உத்தேசித்திருப்பதாக வெளியிட்ட அறிக்கையில் "எந்த ஒரு தனி நபரிடத்திலும் பிரத்தியேகமான பற்று வைத்துக்கொண்டு இருக்கக் கூடாதென்பது என்னுடைய சித்தாந்தம்; ஆகையால்தான் விவாகத்தை ரத்துசெய்ய உத்தேசம் என்று கூறியுள்ளாள்.

இவ்விதமாக அமெரிக்காவில் சராசரி ஆறு பேருக்கொருவர் விவாக ரத்துச் செய்துகொள்ளுகின்றனர். தென்னமெரிக்காவில் சென்ற வருடத்தில் 1232559 விவாகங்கள் நடந்தேறி இருக்கின்றன. 201475 விவாக ரத்துக்கள் செய்திருக்கிறார்கள். சுமார் 20 லக்ஷம் அமெரிக்க ஸ்திரீகள் புருஷர்களால் விவாக ரத்துச் செய்யப்பட்டு அவர்களளிக்கும் ஜீவனாம்சத்தைக்கொண்டு பிழைக்கின்றனராம். இத்தொகை 15 கோடிப் பொன்னுக்குமேல் உயர்ந்துகொண்டே போகின்றன. (தொடரும்.)

# விதவைகள் விடுதலை!

( புதுவை, R. S. ராஜலக்ஷ்மி அம்மாள். )

[நம்பிக்கைகொண்டெல்லோரும்—என்ற மெட்டு]

பல்லவி

விதவையர் மறுமணம் நடைபெற வுலகினில்
வேலை செய் குவோம் தினம்
வேலை செய் குவோம் துயர்
மீளச் குவோம் என்றும் (வி)

அனுபல்லவி.

பால்ய மணம்செய்வ து நீது இந்த
பாரதநாட்டில் த காது நாளும்
காதல் மணந்தனை நீதியாய் செய்தலே
கன்னியா வாழ்வு என்றும் (வி)

தோகையறு

இளமை மணம்செய்து ஏந்திழைகள் வாழ்க்கையை
இன்னலில் போக்குகிறார்கள்
வளமைபெறும் வயதில வதுவைசெய்த கணவனும்
வானுலகு ஏகுறார்கள்.

அனுபல்லவி எடுப்பு

பெருத்த செல்வத்தில் மனம் கொண்டு தங்கள்
பெண்களை கொடுப் பதே நன்று என
நரைத்த கிழவனென்றும் கருத்தில் நினைத்திடாமல்
நல்கு வார் என்றும். (வி)

தோகையறு

தாய்தந்தையார் தங்கள்சேய்களைப் பாழாக்கி
தயங்கிடச் செய்திடாமல்
வாழ்வுபெறும் பருவ வயதினில் மணம்செய்தால்
வன்மையுடன் வாழுவார்கள்.

அனுபல்லவி எடுப்பு

தேசமெங்கிலும் மகிழ்தாங்க—பெண்கள்
சிந்தைகலங்கும் துன்பம்நீங்க—இந்த
காசினிமீதினில் மாசின்றி யாவரும்
கண்ய மாய் ஓங்க—என்றும் (வி)

(குமரன்.)



# சித்த வைத்தியம்.

(K. சபாபதி பிள்ளை, வைத்தியர், பழனி.)

(88-ம் பக்கத் தொடர்ச்சி.)

'குப்பையிலே பிறந்த கீரை
குரு முறையாலறிந்த கீரை'

அதாவது எரு மிகுந்து சத்து நிறைந்த நிலத்தில் உற்பத்தியாகும். குப்பைக்காட்டிலும் கிடைக்கக்கூடிய இலகுவான ஒரு பச்சிலை. ஆனால் இத்தகைய ஒரு பச்சிலை நமக்கு உபதேசிக்கக்கூடிய ஆசிரியரால் அனுக்கிரகம் செய்யப்பட வேண்டும்.

வைத்தியனுக் கேற்ற கீரை

வாதத்திற்கு கையாண்டு அனுபவித்த இந்தக்கீரையானது வைத்தியத்திற்கு தலைசிறந்த ஓர் மூலிகையாகும்.

'பச்சைப் பசேலென்ற பருப்புக் கீரை
பார்த்தவுடன் பழுத்துவிடுந் தங்கக்கீரை'

இம் மூலிகையானது பச்சை நிறத்தையுடையது. ஆனால் ஒரு பருப்புக்கீரை. அந்த இலையை முறைப்படி உபயோகித்தால் இரசவாத சித்தி அடையலாம். உருக்கு முகத்தில் தங்கத்தைப்போல் பழுத்துவிடும்.

கொல்லையில் முளைக்கக் கூடிய ஒரு லேசான மூலிகையின் வல்லமையை நமது சித்த புருடர்கள் வெகு பரிபாஷையாகக் கூறியிருப்பதைக் கவனித்தால் மூப்பு மூப்பு வென்று வழிபற்றுப்பேசும் சிலருக்கு இது ஒரு சாட்டையாகும்.

'வாயிலே அடக்குங் கீரை
வானமணி பார்க்குங் கீரை'

இந்த மூலிகையை வாயிலே அடக்குவதினால் ஆகாயத்திலே

யுள்ள நக்ஷத்திரங்களைக்கண்டு ஆனந்திக்கலாம். நக்ஷத்திரங்களை எந்நேரத்தில் பார்க்கலாமெனின், பகற்காலத்தில் என்று நாம் தீர்மானிக்கலாம்.

நாம் இதுவரையில் ஷை மூலிகையின் கருத்தை விவரித்தோம். இனி அந்த மூலிகை எதுவென்று பார்ப்போம்.

"மிளகதா மணிதிரண்டிடும்
மின்னிப் பழங்கள் சிவந்திடும்

கோத்துக் கோத்தாய்த் தொங்கிடும்
கோதையர்கள் பொங்கிடும்

சித்தர் மூலிரசத்திேனாடே
சேர்ந்திடும் சிங்கார மூலியே.

ஆய்ந்தோரு புகையிலை
அரைக்காசுடன் சேர்த்திடு

விந்து விட்டுப் புகைத்திடு
வீரஜோதி வர்ணமே"

இந்தப்பாட்டின் கருத்தை ஆராய்வோம்.

மிளகைப்போன்று திரண்டுருண்டு மணிமணியாகவும், பழங்கள் கொத்துக்கொத்தாய் சிவந்த நிறத்தில் தொங்கக் கூடிய ஒரு மூலிகை. பெண்கள் சமயலுக்கு உபயோகிக்கக் கூடியது. இத்துடன் சித்தர் மூலிரசத்தைச் சேர்க்கும்படி தெரிவிக்கின்றார். சித்தர் மூலி என்பதற்குஇந்த இடத்தில் நாம் கஞ்சா இலைச்சாறு என்றுதான் முடிவு கட்டவேண்டியிருக்கிறது. மேலும் ஆய்ந்தெடுக்கக்கூடியது பச்சைப் புகையிலை. இந்த பச்சைப் புகையிலை ரசத்தையும் எடுத்து இவைகளை அரைக்காசு — காசு என்றால் தாம்பிரத்துட்டு. இவைகளை கலப்பற்ற நயம் ஜல்லியுடன் சேர்த்து, விந்து என்று கொண்டாடக்கூடிய ரஸத்தை அத்துடன் கலக்கி புகைத்திடவேண்டும்.

இதிலிருந்து நாம் அறிவதென்ன என்றால் ஒரு சன்யாசி வந்தார். ஒரு பைசாவை சிலம்பியில் வைத்தார். அத்துடன் கஞ்சாவையும் வைத்துப் புகைத்தார். சிறிது நேரத்



தில் ஜல்லி பழுத்து வர்ணமாகி மாற்றுக்கொடுத்துவிட்டது என்று சாதாரண ஜனங்கள் சொல்லிக்கொள்ளும் ஒரு விஷயம் இந்த இடத்தில் நமக்கு ஞாபகத்தில் வருகிறது. அப்படிப் புகைத்திருப்பதால் அந்த (துட்டு) தாம்பிர ஜல்லியானது ஜோதி வர்ணமாகும். (சிவந்த பழுத்த நிறமாகும்)

ஆனால் இவ்வித மகிமை பொருந்திய ஒரு சிறு வேலையினால் நாம் இரசவாதத்தில் நமது சித்த புருடர்கள் எவ்வளவு முயற்சிசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதை நாம் உணரலாம்.

'முப்பு' வைப்பற்றி நாம் குறை கூறவில்லை. நமது சித்தவைத்தியத்தின் பெருமை முப்புவில்தான் இருக்கிறதென்று சிலர் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில் முப்பு என்பது ஒரு அற்புத மருந்தாக இருக்கலாம். ஆனால் அந்த முப்புவை எந்த வைத்தியர், எந்த யோகிகள், எந்த சன்யாசிகள் செய்து முடித்து, சாஸ்திரப் பரிக்ஷை செய்துளார். ஒருவருமில்லையே! அப்படியிருக்க அதன் சூக்ஷமங்களை அறியாமல் இன்னும் முப்பு முப்புவென்று பிரமாதமாகப்பேசி நமது சித்த வைத்தியத்தின், பெருமையைக் கெடுக்கிறார்கள் என்றே நவிக்கவேண்டியிருக்கிறது.


"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:- உமேலை K.S. ராமனாத அய்யர், ஷண்முகானந்த பவன் ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.

# ஓர் சம்பாஷணை.

லீலா! என்னடி நீ இங்கு வந்ததிலிருந்து ஜோரான வாசனையடிக்கிறது.

நளினா:- வாஸ்தவந்தானா? கேலியா?

லீலா:- போடி நான் என்றைக்காவது உன்னைக்கேலி செய்திருக்கிறேனா என்ன?

நளினா:- லீலா! வாசனை எண்ணெய் 5, 6 துளிகள் தான் இருக்கும். தலையில் தடவினேன். இதற்குள் 4, 5 பேர்வழிகள் என்னைக்கேட்டுவிட்டார்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாய்த் தேய்த்தால் எப்படியிருக்கும்.

லீலா:- வாசனையெண்ணெய் என்றால் அதற்குப் பெயர் இல்லையா?

நளினா:- அதன்பெயர் 'சுசீலா' சுகந்த வாசனைத்தைலம்

லீலா:- எங்கு வாங்கினாய்?

நளினா:- எங்காத்துக்காரருக்கு 'சித்தன்' என்ற பத்திரிகை வருகிறது. அதில் விளம்பரம் செய்திருப்பதைப்பார்த்து ஆர்டர் செய்தார்.

லீலா:- விலை என்னடி?

நளினா:- அப்படி விலையொன்றும் அதிகமில்லை. புட்டி 1-க்கு அணா பத்தேதான்.

லீலா:- வாசனை எத்தனை நாளைக்கு இருக்குடி?

நளினா:- அடியே எப்போதும் இருக்கடி. அதில் ஒரு விசேஷம் இருக்கு. தெரியுமா?

லீலா:- என்ன?

நளினா:- நான்தான் எண்ணெய் தடவினேன், எங்காத்துக்காரர் தலையிலே வாசனையடிக்குதடி.

லீலா:- எனக்கும் ஒரு புட்டி வாங்கித் தரச்சொல்.
நளினா:- சரி அவ்விதமே செய்கிறேன்.



## அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞான யோகிகள்.)

(195-ம் பக்கத் தொடர்ச்சி.)

### சயரோகம்.

சயரோகம் உண்டாகும் நேர்மை தன்னைச்
சாற்றுகிறேன் மாநிலத்தில் மாந்தர்க் கய்யா
சயரோகம் வரும்போது ரத்தந் தன்னில்
காணுகிற சிறுகிருமி சுவாசப் பையின்
மெய்யான கண்ணறைக்கு மத்தியிலுந் தான்
மகத்தான கண்ணறைக் குள்ளும் சென்று
நியமான சுவாசகுழல் கிளையிற் சென்றால்
நிசமான சயரோகம் உண்டாம் பாரே. (54)

உண்டாகும் வேளை தன்னில் கிரந்தி அய்யா
உத்தமனே நாளுக்குநாள் பெரிதே யாகி
பண்டாகி முதலிலது உறுதி யாகிப்
பாரித்து நாள்சென்றா லப்பா கேளாய்
திண்டிக்குங் கிரந்தியில சுற்றிலுந் தான்
சிறந்த உப்புசத்தில் தாபனமுங் கண்டு
கண்டிதமாய்ச் சீக்கொண்டு கிரந்தி யாகிக்
கதித்துடைந்து சுவாசக்குழல் களுக்குள் செல்லும் (55)

சென்றுபின்பு கபத்துடனே வெளியே வந்து
சிறப்பான கிரந்திகளில் குழியுண் டாகி
அன்றுமுத லக்குழியைச் சுற்றியே தான்
அழகான நாதனிற் கிரந்தி யுண்டாய்ப்
புன்றிபோல் அதைப்பெருக்கச் செய்து விட்டு
பண்பான உப்புசத்தில் பாஸ்தானத்தில்
குன்றியே பண்ணுமது கிரந்தி யுண்டாய்
குறிப்பாக உப்புசத்தை கெடுக்குந் தானே. (56)

கொடுக்கின்றவேளை தன்னில் குறியைக் கேளாய்
கொடியான இருமலுடன் ரெத்தகாசம்
நடுக்கின்ற சயகாசம் அக்கினி மந்தம்
நலமான நாடியது விரைந்தே யோடும்
படுக்கின்ற சுரமுடனே கஷ்ட சுவாசம்
பண்பாகத் திரேகத்தில் சடவு காணும்
விடுக்கின்ற குரல்கம்மல் வியர்வை பேதி
மிகுந்திரு கண்கணத்துச் சிவக்கும் பாரே. (57)

பாரேநீ மாதருக்கிவ் ரோகம் வந்தால்
பண்பான சூதகத்தை நிறுத்து மய்யா
கூறேநீ சிலநாட்கள் சென்றபின்பு
குறிப்பாக சொற்பசுரம் பலவீனங்கள்
தேரேநீ முகந்தன்னில் மினுமினுப் புண்டாய்
தெளிவாக மாலைதனிற் சுரமுண்டாம்
காரேநீ காலையில்தான் வியர்வை யுண்டாய்
கனமான சோகமது காணும் பாரே. (58)

காணுமடா இன்னுமொரு குறியைக் கேளு
கனமாகத் தோன்றிச் சேற்பனமுங்காணும்
பூணுகின்ற விரலதினால் தட்டிப்பார்த்தால்
பொங்கமுடன் கெட்டியாய்ச் சத்தம் கேட்கும்
பேணிவந்த ஆரப்பந் தனிலே சுவாசம்
பிரியமுடன் பலமான சத்தம் காட்டும்
காணுகின்ற ரோகமது மீறி நின்றால்
மதிப்பாகக் குடுகுடெனக் காட்டும் பாரே. (59)

காட்டுகின்ற திரேகத்தின் எடைதான் மெத்தக்
கதிப்பாகக் குறையுமடா நாளுக்கு நாள்தான்
ஊட்டுகின்ற இரண்டாண்டு வரையி லுந்தான்
உள்ளபடி போராடும் உயிருக்கே தான்



ஊட்டிவிடும் சிலருக்கு மூன்றாந் திங்கள்
புகழான மரணமது உண்டா மய்யா
ஆட்டமுடன் இதற்குத்தான் மருந்து கேளாய்
அப்பனே அயவெள்ளை யப்பிரக மாமே. (60)

ஆமேதான் தாம்பிரத்தின் சுன்ன மீய்ந்தால்
அப்பனே மூன்று தினத்தில் தீருப்பார்
போமேதான் தாளகத்தின் சுன்ன மீய்ந்தால்
புகழான ஐந்துநாள் பத்தியம் காரு
பாமேவும் சிவபூசை நந்தா வனமும்
பக்குவமாய் சத்திரங்கள் கட்டி வைத்து
பூமேவும் அன்ன தானங்கள் செய்தால்
பொறிவிட்டு ரோகமெல்லாம் பறக்கும் பாரே. (61)

## காசம்.

உரைக்கிறேன் காச ரோகத்தின் சேர்மை
உட்பரிச நாம்பையது பற்றிக் காணும்
மறைக்கான சுவாசத்தின் குழல்கள் தன்னில்
மருங்கியதோர் சிறுகிளைகள் பிருவமாய்ச் சுண்டி
முறைப் பதினாலிக்கொடிய ரோக மப்பா
முறையாகக் காணுமடா மாந்தர்க் கேதான்
சுருக்கென்று உடலுக்குக் குணத்தைக் கேளாய்
தலைவலியாம் நித்திரையும் கெட்டுப்போமே. (62)

கெட்டபின்பு மூச்சடைப்பு கொஞ்சமுண்டாய்
குழிசென்று மார்பினிலே பாண்டே யாகி
திட்டென்று ரோகியவன் யெழுந்து மெத்தத்
திண்டாடி சுவாசம்விட அழுவான் பாரே
பட்டவுடன் தலைகவிழ்ந்து காத்தை வாங்கிப்
பாரினிலே கைகளைத்தான் தலைமேல் வைத்து
சட்டமுடன் வாய்திறந்து இருப்பானய்யா
சதிரான தொண்டைதனில் சத்தம் பாரே. (63)

(தொடரும்)

# மருந்துசெய் பகுதி.

## பஞ்சமுக செந்தூரம்.

சாதிலிங்கம், ரசம், கந்தகம், வீரம், தாளகம் முறைப் படி சுத்திசெய்து சரியெடை எடுத்து காட்டாமணக்குப் பால் விட்டு ஒரு நாள் அரைவை செய்து, வில்லை தட்டிக்காய வைத்து மூன்று எருவில் புடமிட்டெடுத்து புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:— வேளைக்கு 2-குன்றிமணி எடை விதம் காலைமாலையாக நாளொன்றுக்கு 2 வேளை விதம் கொடுக்கவும்.

அனுபானம்:— நெய் அல்லது தேன்.

உபயோகம்:— மேகம், வெடிசூலை, குஷ்டம், கரப்பான், பத்துக்கள், இளைப்பு முதலியன குணமாகும்.

பத்தியம்:— கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை நீக்கவும்.

---

## சூதக வயிற்றுவலி நிவாரணி.

வரிக்குமட்டிக் காய்ச்சாறு கால்படி, வெள்ளைப்பூண்டுச்சாறு கால்படி, கொச்சிச்சாறு கால்படி, மோர் காலபடி. இவற்றோடு ஓமம், லிங்கம், காயம், வெங்காரம், மிளகு வகைக்கு ரூபாயெடை ஒன்று எடுத்துப் பொடிசெய்து போட்டு, அடுப்பிலிட்டுக் காய்ச்சி, $\frac{1}{4}$-படியாகச் சுண்ட வைத்து, பீங்கானில் வைத்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு:— வேளைக்கு ஒரு அவுன்ஸாக நாள் ஒன்றுக்கு 2-வேளை விதம் கொடுக்கவும்.

அனுபானம்:— சீரகநீர் அல்லது சீரக கஷாயம்.

உபயோகம்:— வயிற்றுவலி, தலைவலி, சூதகக்கேடுதல் முதலியன குணமாகும்.



# மூலிகைப் பகுதி.

## மிளகுத்தக்காளி.

இச்செடியைப்பற்றி யாவரும் எளிதில் அறிவர். இது தோட்டத்தின் வேலி ஓரங்களில் முளைத்திருக்கும். இவ் விலை கசப்புள்ளது. இச்சாறுடன் தயிர் சரி அளவு கலந்து காலையில் சாப்பிட்டுவந்தால் வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

மந்தாக்கினிசோபை வாந்திகழல்வாயுவெப்ப
மிந்துநோய்பாண்டோ டெதிர்விக்கல்-முந்த
வளருமுத்தோஷநோய் மாற்றுமெப்பான
மிளகுத்தக்காளியிலை மெய்.

மிளகுத்தக்காளியிலை வெண்ணுகங்கட்டு
மிளகுபற்சிந்தூரத்திற் கேகுமொருவுமின்ற
மேகச்சொறியகற்றும் வெட்டையனற்றணிக்கும்

(பதார்த்தகுணசிந்தாமணி)

ஷை இலைச்சாறு படி அரைக்கால், பசு நெய் படி அரைக்கால், குங்கிலியம் ரூபாயெடை ஒன்று இவைகளை நீர் சுண்டக்காய்ச்சி வேளைக்கு அரை வீசம்படியாகச் சாப்பிட்டுவர உஷ்ணம், வாய்ப்புண், சுரம் நீங்கும்.

ஷை இலைச்சாறு படி $\frac{1}{4}$, விளக்கெண்ணெய் படி $\frac{1}{4}$, அரைத்த கருஞ்சீரகம் ரூபாயெடை 1. இவைகளைக்கலக்கி நீர் சுண்டக்காய்ச்சி குழந்தைகளுக்கு உண்டாகும் நீர்மாந்தம், நீர்க்கோவை, இளைப்பு முதலியவைகளுக்கு இரவில் ஒரு கரண்டி விதம் கொடுத்துவர குணமாகும்.

கடுக்காய், குங்குமப்பூ, திப்பிலி வகைக்கு ரூபாயெடை $\frac{1}{4}$ தாய்ப்பால் விட்டரைத்து, மிளகுதக்காளி இலைச்சாறு படி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் படி $\frac{1}{4}$, சேர்த்து நீர் சுண்டக்காய்ச்சி காலை மாலை ஒரு தேக்கரண்டி அளவு கொடுத்துவர இருமல், தொண்டைப்புகைச்சல், சுவாசகாசம், மலக்கட்டு முதலியவைகள் நீங்கும்.

ஷை காய் வத்தல் பாண்டு வீக்கம், வாந்தி உள்ளவர்களுக்கு நீர்பேதியை உண்டாக்கி வியாதியை நீக்கும்.

# பழனி, முனிசிபல் பிரதம ஆசிரியர்கள் சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டம் 4—7—35 மாலை 5-மணிக்கு டவுன் பெண் பாடசாலை கட்டடத்தில் Rev. டேவிட் நரசிங்கம் B.A., B.L. அவர்களின் தலைமையின்கீழ் கூடிற்று.

ஜனாப் C. M. ரபீதீன் சாயபு அவர்களால் உபாத்தியாயர்களும் தற்கால நிலைமையும் என்றபொருள்பற்றி உபந்நியாசம் செய்யப்பட்டது.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. முனிசிபல் பாடசாலை ஆரம்ப ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு ஹைஸ்கூலில் இலவசமாகக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இச்சங்கம் பழனி முனிசிபல் கௌன்சில் சபையாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. 22—4—35-தேதியில் கூடிய முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்கள் சங்க 4-வது தீர்மானப்படி அதாவது இதர ஜில்லாபோர்டு, முனிசிபல் பாடசாலைகளுக்கு சனிக்கிழமைகளில் அரைநாள்மட்டும் வேலைசெய்யும்படி உத்தரவு அளித்திருப்பதுபோல் பழனி முனிசிபல் ஆரம்ப பாடசாலைகளுக்குப் சனிக்கிழமைகளில் அரைநாள் மட்டும் வேலைசெய்யும்படி உத்தரவளிக்கவேண்டுமாய் இச்சங்கம் மகா-ள-ள-ஸ்ரீ கமிஷனரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. நமது டவுனில் வெளியாகும் "சித்தன்" என்ற பத்திரிகை ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படும் கட்டுரைகளை வெளியிடுவதாலும் நமதுசங்க நடவடிக்கைகளை அவ்வப்போது பிரசுரித்து வருவதாலும் "சித்தன்" ஆசிரியர் அவர்களுக்கு இச்சங்கம் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

தலைவரவர்கள் தம் முடிவுரையில் ஆசிரியர்கள்தான் பிள்ளைகளுக்கு வழிகாட்டிகளெனவும் அவர்கள்தான் மாணவர்களின் பிற்காலவாழ்வை சிறப்பாக்கமுடியுமென்றும் மற்றும் ஆசிரியர்களின் கடமைகளைப்பற்றியும் விரிவாகக் கூறினார்கள். பின் கூட்டம் இனிதுமுடிவடைந்தது (காரியதரிசி)



# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(203-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 2] [களம் 3

ஜயதுங்கன், சந்திரகுமாரன்.

காலம்—பகல்.

இடம்—ஜயதுங்கன் மனை.

ஜயதுங்கன்:— குழந்தாய்! ஏது உன் பொருட்டு யான் எடுக்கும் முயற்சியெல்லாம் விழலுக்கிறைத்த நீராம்போலுனது? என் எண்ணமெல்லாம் நீ சுகுணசுந்தரியை மணப்பதால் பாண்டிய நாட்டை ஆளும் உரிமை பெறுவாய் என்பதே. உங்கள் இருவர் விவாகத்திற்கு உன் சிறிய பாட்டன் வரகுணர் ஒரு பெருந்தடையாயுளர் என்பது என் துணிபு. அவருக்கு உன் மீது காதல் எழா விதம் அவர் யாது காரணம்பற்றியோ ஆக்குகின்றனர். அஞுமதேயனுன நாகானந்தன்பால் மிக்க அன்பும் ஆதரவும் காட்டுகின்றனர். அவரன்றி மன்னனும் அவரை மிகுதியும் விழைக்கின்றனன். இவற்றிற்கெல்லாம் காரணம் விளங்கவில்லை. நாகானந்தன் மிருதுபாஷி, புறங்கூறாதவன். எதனையும் ஏற்றவாறு எடுத்தோதி, யாவர் மனத்தையும் தன் வழி கவரும் தன்மையன். அதுபற்றிப் படைவீரர் பலரும் அவனைத்தங்கள் குலதெய்வமெனக்கருதி வழிபடுகின்றனர். உயர் குலத்துதித்த உபசேனாதிபர் அனைவரும் அவன் மொழி கடவாதொழுகி அவனுட்டிய வண்ணம் ஆடுகின்றனர். அவையோர் அனைவரும் அவன் நயமொழி கேட்டு மதுவுண்ட வண்டுகள் போன்று மயங்குகின்றனர். எங்கு அவன் மன்னன் புதல்வி முன்னர்

தோற்றுவனோ அவள் மனமுற்றுந் தன்னெழிலால், கல்வியால், போர் வலியால், நற்குணத்தால் கவருவனோ என அஞ்சுகிறேன். விஷயமிவ்வாறிருக்க நீயும் உப சேனாதிபதியாய் சேனையொடு போவான் முன் வந்துவிட்டாய். அவ்வாறு போவதால் ஏற்பட இருக்கும் பலாபலன்கள் கருதினையில்லை. உன் வீரமும் சூரமும் அவன் பராக்கிரமத்தின் முன் தீவட்டியின் கீழ் தீபமாகும். அதனால் சுகுணசுந்தரிதன் சொற்ப மதிப்பும் நீ இழக்கவேண்டி வரும். அதனால் அவளை மனைவியாக அடையும் பாக்கியமும் நழுவும். பின்னர் பாண்டிய நாடும் உன்னை விட்டகலும். ஆதலின் சேனையொடேகும் கருத்தினைப் போக்குக. சுகுணசுந்தரிபால் அடிக்கடி ஏகுக. அவள் மனமுற்றும் உன்பாலாக்குக. உங்கள் வதுவையை துரிதமே முடிக்குக.

சந்திரகுமாரன்:— தந்தையே! தாங்கள் என் ஏற்றமே கண்ணுங் கருத்துமாயிருத்தலின் நாகானந்தர் குணமுணராது போயினீர். அவர் முற்றுங் கற்றவர். போருக்கொருவர், சூதும் வாதுமற்றவர், வாய்மையர், யாவர் மாட்டும் வணக்கமும் மரியாதையும் உடையவர். அவர் குல நலம் குடத்துட்பதிந்த விளக்கன்ன இருப்பினும் உயர் குல குணமெலாம் ஒருங்கே விளங்குது. அவர்தம் நட்பினைக் கோராதவர் மானிடருள் பதரேயாவர். தற்பெருமை வேண்டா அவருடனன்றோ சேனையொடேகுதல் வேண்டும்: என் போர்த்திறன் விளக்குதல் வேண்டும். வெளித் தோற்றமிலாது மனதுள் பொதிந்து கிடக்கும் சுகுணசுந்தரிதன் காதல் முற்றும் பெறுதல் வேண்டும். என் சிறிய பாட்டனார் என் வதுவைக்குத் தடையாவர் என்பது வீண் பயமே. அவர் என் மீது அன்புளர், ஆதரவுளர். எது சமயம் கன்னிமாடமேகினும் இன்முகங்காட்டி வரவேற்கின்றனர். என் குண நலம் அவர் சுகுணசுந்தரிபால் எடுத்தோத யான் பன்முறை கேட்டுளேன். அன்றியும் நாகானந்தரும் என் போட்டியாய் ஏற்



படார் என்பதையும் நம்புவீராக. அவர் உலக மோகம் களைந்தவர், தன்னிலையை நன்குணர்ந்தவர். அதுபற்றி எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடார். நான் போருக்குச் செல்லாது இங்கு தங்குவேனேல் உத்தரகுமாரன் போன்று பெண்டிர் இகழ்ச்சிக்காளாவேன். சுகுணசுந்தரிதன் நகைப்பிற்காளாவேன். அதுபற்றி அவசியம் சேனையொடு போதல்வேண்டும்.

ஜயதுங்கன்:— என் அன்பே! உன் மீதுற்ற அன்பின் பெருக்கால் நல்லோரும் தீயோரென என் மனத்துதிப்பதாயே வைத்துக்கொள்வோம். என் பயமெல்லாம் மனோராஜ்யமெனவே தள்ளிவிடுவோம். மற்றோர் விதமே யோசிப்பின் நீ சுகுணசுந்தரியின் பொருட்டு அவள்தன் பெற்றோரால் வரிக்கப்பட்டுள்ள வரன். அதுபற்றி பாண்டிய நாட்டின் இளவரசன். இளவரசன் கடமையோ தினைதினை மன்னவை ஏகுவதும், ராஜதர்மம் முற்றும் பிரத்தியக்ஷமே கண்டு அனுபவமாக்குதலுமாகும். அவ்வாறிருக்க அபஜெயமும் அதுபற்றி இறப்பும் நேரிடற்கேதுவான இரணரங்கம் இளவரசர் ஏகலாமோ? மன்னன் நேரில் யுத்தம் கொடுத்தல் எவ்விதமும் பரியாய பக்ஷமே. அதனினும் அவர்பின் நாட்டிற்கு ஊன்றுகோலான இளவரசன் யுத்தத்திற்குச் செல்லுதல் என்பதே தகாது. ஒருக்கால் ஆளும் மன்னர் போர் தந்து மாளின், இளவரசு ஆட்சி பெற்று நாட்டிற்கு மீட்சி தரலாம். இளவரசு அவ்வாறாயின் நாட்டிற்கேற்படும் நஷ்டம் கருதாய். ஆதலின் நீ போருக்குச் செல்லாதொழிக.

சந்திரகுமாரன்:— தந்தாய்! நீவிர் கூறுவது விந்தையே. பட்டத்திற்குரியவர் சுகுணசுந்தரியே ஆவர். நாயகனாக வேண்டுவோன் சத்துருக்களினின்றும் நாட்டினைக் காக்கும் ஆற்றல் உள்ளவனாயிருத்தல் வேண்டும். அவ்வித ஆற்றல் உள்ளான் யான் என்று நிரூபிக்க நற்சமயம் வாய்ந்திருக்க,

பேடியன்ன கன்னிமாடத்து காலங்கழிப்பின் அவள் காதல் எவ்வாறு என்பாலாகும்? முளையௌவிருக்கும் சொற்ப காதலும் புழுவரித்தன்ன கழுவி வீழ்ந்து வாடும். நாகானந்தன் ஆற்றலாலேயே சோணாடு வென்றதன்றி அவர்தம் குலம் நற்குலமென வெளியாயின் என்னும்? அவள் காதலெனும் பெருக்கு பிரவாகித்து நாகானந்தன் கீர்த்தியெனும் சாகரத்துள் கலந்துவிடாதா? அது சமயம் பெற்றோரும் மற்றோரும் முறைகருதி யெனதாக்க அவளை நிர்ப்பந்திக்கவும் கூடுமோ? ஓர் க்ஷத்திரிய யுவதிக்கு சுயமே தனக்கேற்ற வரனைத்தேடும் பாத்தியம் மனுவால் அளிக்கப்பட்டுளதே. இவை கருதி நாகானந்தனிலும் நான் வீர சூரன் என்பதினை நிலைநாட்டுதல் வேண்டும். இத்தருணந் தப்பின் எத்தருணம் வாய்க்கும் எனக்கு என் புகழினை நாட்ட? அது நாட்டப்பெறின் அத்துடன் என் உயர் குடிப்பிறப்பும், அவளுக்கும் எனக்கும் இயற்கையே ஏற்பட்டுள உரிமையும், என் கல்வி கேள்விகளும் ஒன்றுசேரின் என்னையன்றி அவள்தன் காதலைப்பெறுதற்கு ஏற்றவன் ஒருவன் ஏற்படுவனோ? ஆகவின் எவ்விதம் ஆயினும் யான் யுத்தத்திற்குச் சென்றே தீருதல் வேண்டும்.

ஜயதுங்கன்:- குழந்தாய்! நீ சொல்வதெல்லாம் சரியே. ஆயின் உன் எண்ணப்படி சோணாட்டு வெற்றிக்கு நீ காரணம் என்பதனை நாட்டாது தவறின் என்னும்?

சுந்தரகுமாரன்:— தந்தாய்! யானிங்கு வந்ததால் யாது பயன் விளையுமோ அது பலனே சம்பவிக்கும். அன்றி க்ஷத்திரிய குமாரன் தன்னை நாட்டின் பொருட்டு அர்ப்பணம் செய்யவேண்டிய சமயம் பின்வாங்கினான் என்னும் அபக்யாதிக்கும் ஆளாகவேண்டும்.

ஜயதுங்கன்:— குழந்தாய்! நம் குலதெய்வமான மீனம்பிகைதான் நம்மிருவர் அவாவையும் பூர்த்திசெய்தல் வேண்டும். யுத்தத்திற்குச் சென்று க்ஷேமமே ஜெயவானாய்த் திரும்பி வருவாயாக.

(இருவரும் மறைதல்)

(தொடரும்)



# பரீக்ஷை வினாக்கள்.

(L. N.)

கீழே கண்டவற்றிற்கு குறித்த அளவில் விடை தருக.

1. விபசாரம் என்பது ஆண் பெண் இருபாலர்க்கும் பொதுவானது தானே. அவ்வாறிருக்க விபசாரத்தடைச் சட்டத்தை பெண்கள்மீது மட்டும் பிரயோகிக்கக் காரணம் என்ன?

2. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற ஜாதித்திமிரும், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடும், ஆண், பெண், முதலாளி, தொழிலாளி பேதாபேதங்களும் இல்லாத சம அந்தஸ்தும், சுதந்திரமும், உழைப்பில் ஆர்வமும், வாழ்க்கையில் விருப்பும், ஆனந்தமும், சுபிட்சமும் பொங்கி தாண்டவமாடும் ஒரு நாட்டில் வசிக்க நீ விரும்புவாயா? உலகத்திலேயே அத்தகைய நாடொன்றைக் குறிப்பிட முடியுமா? அதைப்பற்றி தெரிந்ததைச் சுருக்கி எழுதுக.

3. இந்திய அரசியல் சீர்திருத்தத்தில் காங்கிரஸ் முன்னணியில் நிற்கிறது. சமூக மத சீர்திருத்தத்தில் முன்னணியில் இருக்கும் சங்கம் அல்லது ஸ்தாபனம் எது?

4. கீழ்க்கண்டவை யாரால் எப்போது சொல்லப்பட்டன? ஏன்?

a. 'பெண்ணொரு மாயப் பிசாசம்'

b. 'ஆண் கல்லூரிகளைக் குறைந்தது 10-வருடமாகிலும் மூடி பெண் கல்லூரிகளை அதிகரிக்கவேண்டும்.'

c. தென்னாட்டு மக்கள் சத்தும், புஷ்டியுமுள்ள ஆகாரங்களை உட்கொள்ளத்தக்க முறையில் ஆகார வகைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். சத்தற்ற அரிசியும், மிளகு தண்ணீரும் அவர்களை ஆண்மையுள்ளவர்களாக்கமாட்டாது தடுத்து வருகிறது.'

d. 'தலைவிதியின்மீது பாரத்தைப்போட்டு இந்து குடும்பங்கள் நசித்து வருகின்றன.'

5. ஜோன் ஆப் ஆர்க் (Joan of Arc) ஓர் வீரமங்கையாக பிரெஞ்சுக்காரர்கள் கொண்டாடுகிறார்கள். அத்தகைய ஓர் வீரமணியை இந்தியா பெற்றெடுக்கவில்லையா? இருப்பின் அது யார்?

# மதிப்புரை.

## கவிதாமண்டலத்திற்கு

"சித்தன்" கொடுத்த திருப்பாட்டு.

தாழிசைப்பா

புதுமைக் கவிதா மண்டலமே!
புதுவைக் கவிதா மண்டலமே!

மதுரத் தமிழ்மொழி வாழியவே
வண்ணக் களஞ்சியம் நீழியவே

பாரதி விதுவரை கண்டதில்லை
'பாரதி' போலொரு பண்புலவன்

சீரதிகம் பெறு பொன்மொழியே
சித்தன் கவிபுனை தென்மொழியே

அச்சங் கலப்பு புனற்கூடல்
முச்சங் கப்பயில் முத்தமிழின்

மெச்சும் பாமண் டலமுகமே
விகசித மடைவாய் வெகுசுகமே

காலந் தெரிந்து வந்தனையே
கனிவாய் நுமக்கும் வந்தனையே

சீலம் பரவு மதிப்புரையே
சித்தன் கொடுத்தான் மதிப்பிறையே.

# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், இருமிறப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், கபம், வாதம், உடல் வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு, பக்கவாதம் முதலிய நோய்கள் தீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள், ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும் குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ. 4—0—0.
தோலா ½-க்கு விலை ரூ. 1—0—0.
(தபால் சார்ஜ் வேறு)

**சாமி, விருதை, சிவஞான யோகிகள்**
சிவஞான சித்த பார்மஸி, கோவிற்பட்டி.

தமிழ் பிரமசூத்திர ஆசிரியர்,
சாமி, விருதை, சிவஞான யோகிகளால்
வெளியிடப்பட்ட புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தேவோபாச ஞதீபம் (விக்கிரகாராதன விளக்கம்) | 0— 8—0 |
| 2. | விபூதி ருத்திராக்ஷதாரண நிருபணம் | 0—14—0 |
| 3. | வேதாகம உண்மை[illegible] | 0— 1—0 |
| 4. | சிவஞானபோத வி[illegible]விடை | 0— 8—0 |
| 5. | கோவிற்புரி புராண[illegible] | 1— 0—0 |

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை, சிவஞானயோகிகள்**
கோவிற்பட்டி.

என் கவலைப்படவேண்டும்?

# ஆண்டவன் தாயத்து

——(o)——

இந்த தாயத்தை அணிந்துகொள்வதால் நீங்கள் வெகு நாளாய் எதிர்பார்த்த காரியம் கைகூடும். முடியுமோ முடியாதோவென நினைத்தது எதிர்பாராவண்ணமே உங்களெண்ணப்படி முடியும்.

வேலை இல்லையே. தொழிலில் லாபமில்லையே. நல்ல உத்தியோகம் வரவில்லையே — என்ற கவலை நீங்கி தக்க லாபமும், நல்ல வேலையும் கிடைக்கும்.

மனோபயம், ஏவல், செய்வினை, காற்றுக்கருப்பு, பேய்கோளாறுகளால்கஷ்டப்பட்டு எத்தனையோ வைத்தியம், மாந்திரீகம் முதலியவைகளால் நிவர்த்தியாகாதிருந்த அநேகர் 'ஆண்டவன் தாயத்து' அணிந்ததால் கஷ்டம் நீங்கி, புத்திரசந்தானமடைந்து சந்தோஷமாயிருக்கின்றனர். மாணவர்கள் பரீக்ஷையில் ஜெயம் பெறுவார்கள். ஆண்டவன் பூஜாபலம் பெற்று அபார சக்தி வாய்ந்தது. நோய் வராமற் பாதுகாத்து ஆபத்துக்காலத்தில் ரக்ஷிக்கும்.

1-நாள் பூஜை செய்த தாயத்து விலை ரூ. 1-4-0.
12-நாள் " " ரூ. 7-0-0.

**S. V.** ராஜப்பா,
மலைக்கோவில் பிரஸ், பழனி. S.I.

## பழனி ஆண்டவர் பஞ்சாமிர்தம்.

பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதிதீர்த்தப் பிரசாதம் மீ 1-முறை அனுப்ப வருஷம் 1-க்கு ரூ 12
மாதிரி சேட்டு 1-க்கு ரூ 1-8-0.

S. V. ராஜப்பா,
சுந்தரசுவாமிகள் மடம் அடிவாரம், பழனி.

நீரழிவா?

# அப்ரேக் செந்தூரம்.

சாப்பிடுங்கள்.

அதிகம்போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரைச்சத்தையும் குறைத்து, தாகத்தை நிறுத்தி, தேக வெளுப்பை மாற்றி, இரத்த விருத்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. இன்றே இதன் அருங்குணத்தைப் பரீக்ஷியுங்கள்.

புட்டி 1-க்கு விலை ரூ. 15.

---

இதனால் நூற்றுக்கணக்கான காசரோகமுள்ளவர்கள் குணமடைந்திருக்கின்றனரென்பது அனுபவம் ஒருமுறை பரீட்சியுங்கள்.

# தாளக பஸ்பம்.

பிரபல டாக்டர்கள் இம்மருந்தை பரீட்சித்துப்பார்த்து மேலானதெனக் கூறுகின்றனர்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, கஷ்ட சுவாசம், கோளை கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும்சரி குணமாகும். எட்டுவித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது.

24-வேளை புட்டி 1-க்கு விலை ரூ 4—0—0.

---

# நாக பஸ்பம்.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும்.

சீழ்மூலம், இரத்தமூலம், உள்மூலம், தோல்மூலம், நுத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம்.

24-வேளை பஸ்பம் விலை ரூ 4—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

# தாதுபுஷ்டிக்கு

## நிகரற்றது!

சி. எம். சாமி

# மன்மதக் குளிகை.

ஒரே குளிகையால் பரீக்ஷிக்கலாம்.

இல்லற இன்பத்தைக் கோடுப்பதில் இணையற்றது இதுவே!

நரம்புத்தளர்ச்சி, தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், விந்துடைவு, கோசந்துவளல், சோர்வு, இடுப்புவலி, பலஹீனம் முதலியவைகளைப் போக்கி இரத்த விருத்தி, சரீரபுஷ்டி, தாதுபலம், போகசக்தி முதலியவைகளைக் கொடுக்கும். தளர்ந்த நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, நாதத்தை நீடிக்கச்செய்து, மாதர் மனதைத் திருப்தி பண்ணி ஆச்சரியப்படும்படி செய்யும் திறமை உண்டு. அனுபவித்தவர்கள் இதன் அற்புத சக்தியைப்பற்றி வியந்து கூறுகின்றனர்.

20-குளிகை புட்டி 1-க்கு விலை ரூ. 2.

---

## ஸ்கலித நிவாரணி.

இது நித்திரையில் சுக்கிலம் வெளிப்போதல், சரீரம் இளைத்தல் முதலானவைகளைப் போக்குவதன்றி இக்கேட்டிற்குக் காரணமாயிருந்தவற்றை அறவே நீக்கி, வீரியவிர்த்தியையும் தேக பலத்தையும் அடையச்செய்யும்.

24-வேளை புட்டி 1-கு விலை ரூ. 2—0—0.

சகல வியாதிகளுக்கும் மருந்துகள் கிடைக்கும்

**விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.**

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

சூதக வயிற்று வலியா?

# கர்ப்ப எண்ணெய்

## உபயோகியுங்கள்.

பெண்மணிகளுக்கு அவசியமானது.

இது மாதர்களுக்கென்றே கடவுளால் அருளப்பட்ட ஓர் சஞ்சீவி. மாதாந்தர காலத்திலுண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சூதகக்கட்டு, சூதகசூலை, கர்ப்பந்தரியாதிருத்தல், சூதககாலத்தில் இரத்தம் சிறிது கண்டு மறைதல், சூதகம் நின்று சரீரம் ஸ்தூலித்தல், ஆயாசம், தலைவலி, உடம்பு கைகால் வலி, குடைச்சல், தலைபாரம், மயக்கம், வாந்தி, விக்கல், தூக்கமின்மை, இடுப்பு நோய், மலபந்தம், சூதக வாய்வு, முதுகுவலி முதலியவைகளை நீக்கி, சரீர பலத்தையும், புத்திர சந்தானத்தையும் கொடுக்கும். அனுபவத்தில் சிறந்தது.

ஒரு முறை உபயோகியுங்கள்.

புட்டி 1-க்கு விலை ரூ 2—0—0.

---

# சகலமேக சஞ்சீவி.

தங்கம் சேர்ந்தது

அதிக உஷ்ணத்தாலும், பலவித சிற்றின்பச்செயல்களாலும் உண்டான வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர், மேகப்பத்து, கருமேகம், வெண்மேகம், கிரந்தி, கட்டி, ஆராதரணம் விக்கம், கபாலநீர், சூதகக்கெடுதல், இளைப்பு, காசம், குன்மம், கண் வியாதிகள், கொஞ்சக்கால செவிடு, நரம்புவியாதிகள், வாதநீர்கள் முதலிய சகல வியாதிகளும் 7-நாள் மருந்தில் கண்டிப்பாய் குணமாகும். அனுபவமானது. உத்தரவாதமுள்ளது.

7-நாள் மருந்தடங்கிய புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**

# சித்தரசம்,

இது சகலரோகத்திற்கும் உள்ளுக்கும் வெளியிலும் பிரயோகிக்கலாம். மின்சார சக்தியுள்ளது. ஜலத்தில் 3-முதல் 5-சொட்டுவரைவிட்டு சாப்பிடலாம். தீரும் வியாதிகள்:- வயிற்றுவலி, புளியேப்பம், அஜீரணம், வயிற்றுப்போக்கு, தலைவலி, ஜலதோஷம், இருமல், வாய்வு தொந்தரவுகள், காலரா, ஜுரம், ஜன்னி, கைகால் பிடிப்பு முதலியன தீரும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0.

# சர்வவிஷ நிவாரணி.

சகல மேகப்படை, [illegible]ரல், பூச்சிக்கடி, வண்டுகடி, படர்தாமரை இவைகளில் [illegible] நாளில் உதிர்ந்துவிடும். உடனே அரிப்பு நிற்கும். [illegible]டாது.

புட்டி 1-க்கு அணா 0—8—0. டஜன் 1-க்கு 4—8—0.

# பாலகுடோரிக் குளிகை.

குழந்தைகளுக்கேற்படும் காய்ச்சல், ஜலதோஷம், மாந்த தோஷம், வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு, அஜீரணம், செரியாமை முதலியன நீங்கும். தினந்தோறும் இரவில் கொடுத்துவந்தால் குழந்தை புஷ்டியாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0.

# பாலசஞ்சீவிக் குளிகை.

பாலர்களுக்கேற்படும் சகலதொக்கம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், பொறுக்கி விழுங்கிய சோறுகல்கள் நீங்கும். அநேக குழந்தைகளுக்குக்கொடுத்து அநுபவமானது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**


189920

# கட்டுரை எழுதுவோர்

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினால் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நம்பி பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக்கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினால் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.

### ஏஜண்டுகள் தேவை.

எமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி S. I.

Regd. No. M. 3210.

தாதுபுஷ்டிக்கு

# மன்மத குளிகை

உபயோகியுங்கள்.

என்றுமிராத
வீரியம், மனோற்சாகம், ஆரோக்கியம்
பெறுவது நிச்சயம்.

எதிர்பாராத
தேகபுஷ்டி, போகசக்தி, வீரியவிர்த்தி
இவைகளை அடையலாம்.

சரீரத்துக்கு வலுவைக்கொடுத்து,
ஆண்மையை அதிகப்படுத்தி, இரத்தத்தை
சுத்திகரித்து, தாதுபுஷ்டியைத் தரும்.

**20-குளிகை விலை ரூ. 2.** தபால் சார்ஜ் வேறு.

## மலையப்பசாமி வைத்தியசாலை.

பிராஞ்சு:. 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதருஸ்.